

# காப்பி: சில தகவல்கள்!

மிதமான அளவு காப்பி அருந்துவோருக்கு இருதய நோய், இரண்டாம் வகை நீரிழிவு, ஈரல் காயம், முதுமைப் பருவ, மூட்டு அழற்சி, மார்பகப் புற்றுநோய், கணையப் புற்றுநோய் மற்றும் வேறு சில புற்றுநோய்கள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் குறைவு.

★ உடற்பயிற்சியுடன் 300 மில்லி காப்பி அருந்தினால் 20 சதம் ஆற்றல் அதிகரிக்கும். தலை சுற்றல் குறையும். உடலிலுள்ள கொழுப்பும் குறையும்.

★ காபியில் உள்ள 'கபைன்' மூளையை விழிப்புடன் வைத்திருக்கும்.

★ அதிக அளவு காப்பி பருகுவதால் அதிலுள்ள கபைன் ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவுகளை பாதிக்கும். கொழுப்பைக் குறைப்பதற்குப் பதில் அதிகரிக்கும்.

★ காப்பி அருந்திவிட்டு, பால் மற்றும் இனிப்புகளைக் குறைத்துக்கொண்டால் எதிர்பார்க்கும் எடை குறைவையும் ஆரோக்கிய வாழ்வையும் பெறலாம். எடை குறைக்க வேண்டும் என்று விரும்புவோருக்கு இது பலனைத் தரும்.

★ குறைந்த அளவு காப்பி உட்கொள்வது வேலைத் திறனை அதிகரித்து, உடல் செயல்பாட்டையும் மேம்படுத்தும். சிறுநீர் வெளியேற ஊக்கியாகவும், மனச் சோர்வு நீக்கியாகவும், நரம்பு, இருதயம், உடல் வளர்சிதை வினை மாற்றங்களைத் தூண்டும் சக்தி கொண்டதாகவும் காப்பி உள்ளது.

★ படுக்கும்போது காப்பி பருகுவதால் தூக்கம் வர நீண்ட நேரம் எடுக்கும். முழுமையான தூக்கமும் கிடைக்காது.





# எதிரில் ஒரு எதிரி

## ராஜேஷ்குமார்

### 1

'டெலிபிரிண்டர்'கள் ஜுர வேகத்தில் வார்த்தைகளை துப்பிக்கொண்டிருக்க– அந்த ராணுவக் கட்டிடத்தின் 'ஆபரேஷன்ஸ்' அறையில்– ஒரு குருப் காப்டன், ஒரு ஸ்க்வாட்ரன் லீடர், இரண்டு விமான லெப்டினெண்ட்கள். அதில் ஒருவன் பாம்பர், இன்னொருவன் பைட்டர் என்று உத்தியோகத் தோரணையோடு நின்றிருந்தார்கள். நேரம் இரவு 11.30 மணி.

அனைவரின் பழுப்பு நிறக் கண்களும் டெலிபிரிண்டரிலிருந்து பிரசவமாகும் வாக்கியங்களை கொஞ்சம் அச்சமாய் பார்த்துக்

கொண்டிருந்தன. டெல்லி கமாண்ட் தலைமை நிலையத்திலிருந்து கட்டளைகள் சங்கேத மொழிகளில் உற்பத்தியாகி அவர்களை உசுப்பின. வரிகள் கண்களை உறுத்தின.

"புரட்சியாளர்களால் பாரஸ் தீவு கைப்பற்றப்பட்டுவிட்டது. தீவின் பிரதமர் சகோடா, இந்திய தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளார். எழுபத்தேழு எம்.பி.களை புரட்சியாளர்கள்- துப்பாக்கிமுனையில் தங்கள் முகாம்களுக்கு கடத்திச் சென்றுள்ளார்கள். அவர்கள் எந்த விநாடியும் கொல்லப்படலாம். பாரஸ் தீவின் சில முக்கியமான 'ஏர்விங்'குகள் நொறுக்கப்பட்டன. விமானங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஸ்க்வாட்ரன்கள்- புரட்சியாளர்களின் ஏவுகணைகளால் நாசமாயின. நிலைமை மிக மிக மோசம். எந்த விநாடியும் போர் விமானங்கள் பறக்கத் தயாராக இருக்கட்டும்..."

'குருப் காப்டன்' ஹர்விந்தர் தனக்கு பக்கத்தில் நின்றிருந்த ஸ்க்வாட்ரன் லீடர் சுக்தேவையும், விமான லெப்டினென்ட்களையும் கவலையோடு பார்த்தார்.

"நிச்சயம் இரண்டு நாள் போர் இருக்கும்."

"யார் அந்தப் புரட்சியாளர்கள்...?" -சுக்தேவ் கேட்டான்.

"ஸ்கை வல்ச்சர்கள் எனப்படும் சகோடா ஆட்சிக்கு எதிரான கும்பல் அது. சகோடாவின் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்கிற எண்ணத்தோடு- பல மாதங்களாகவே அந்த இயக்கம் இயங்கி வருகிறது. ஒருமுறை ஆட்சியைக் கைப்பற்ற முயன்றவர்கள்- தோற்றுப்போய் இப்போது மறுபடியும் முயற்சி செய்து வெற்றி பெற்றிருக்கிறார்கள்..."

பாம்பர் பைலட் வல்லப் குறுக்கிட்டுக் கேட்டான்.

"அந்த பாரஸ்தீவு இங்கிருந்து எவ்வளவு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது ஸார்?"

"இரண்டாயிரத்து நானூற்றி எட்டு கிலோ மீட்டர்" -சொன்னவர், அவர்களைக் கூட்டிக்கொண்டு போய் சுவரில்



பிரமாண்டமாய் வரையப்பட்டிருந்த உலக வரைபடத்தில்- இந்து மகா சமுத்திரத்தின் மையத்தில் குத்தப்பட்டிருந்த ஒரு வர்ண குண்டூசியைக் காட்டினார்.

"இதுதான் பாரஸ் தீவு... செழிப்பானது. ஏறக்குறைய மராட்டிய மாநிலத்தின் பரப்பளவு கொண்டது. ஜனத்தொகை மூன்று கோடிக்கும் அதிகம். வெள்ளையர் ஆட்சியின்போது- இந்தியா பாரஸ் தீவும் அவர்களுக்கு அடிமைப்பட்டு கிடந்தது. இந்தியா சுதந்திரம் அடைந்தபோது அந்தத் தீவும் சுதந்திரம் அடைந்தது. அங்கே பெரும்பாலான மக்கள் பேசும் மொழி ஆங்கிலம். பாரஸ் மொழியை தாய்மொழியாகக் கொண்டாலும்- அந்த மொழியை பேசுபவர்கள் மிகவும் குறைவு. பாரஸ் தீவு சமீபகாலமாய்- ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக இருந்து வருகிறது. இதன் கடற்கரைகள் அழகானவை. உயரமான தென்னை மரங்களோடு... அடர்த்தியான நீலநிறம் கொண்ட... கடலின்... பின்னணியில்..."

ஆப்ரேஷன்ஸ் அறைக்கு வெளியே- கனமான பூட்ஸ்கள் இரையும் சத்தம் கேட்டது.

எல்லோரும் திரும்பினார்கள்.

லெப்டினென்ட் கர்னல் மீர்சாகிப்- கலவர முகத்தோடு உள்ளே நுழைய- அவசர அவசரமாய் 'சல்யூட்'க்கு வந்து தளர்ந்தார்கள்.

"ஸார்..."

"டெலிபிரிண்டரில் செய்தி பார்த்தீர்களா?"

"பார்த்தோம்..."

"பாரஸ் தீவு நம் தேசத்திற்கு நட்பான நாடு. போருக்கான உத்தரவு எந்த நிமிஷமும் பிறப்பிக்கப்படலாம்... நமது பாம்பர் விமானங்களும், பைட்டர் விமானங்களும் ஆயத்தமாக இருக்க வேண்டும். விமானிகள் அனைவரும் அவர்களுக்கான விமானங்களைத் தொட்டு- ஆகாய வீதியில் பாய- எந்த விநாடியும்

தயாராக இருக்க வேண்டும்."

"துடிப்போடு காத்திருக்கிறோம் ஸார்..."

பாம்பர் பைலட் வல்லப் சொல்லிக்கொண்டிருக்கும்போதே- பக்கத்து அழுக்கு மேஜையில் இருந்த காக்கி நிற தொலைபேசி துடித்தது.

மீர்சாகிப் எழுந்தார். தன் கெட்டியான நரை மீசைக்குக் கீழே உதடுகளை அசைத்தார். "ஹலோ... நெம்பர் டென்த் விங்க்..."

"ஹாட் லைன்- டுவெண்டி..."

"எஸ்..."

"இது ராணுவ அமைச்சரின் அலுவலகம்..."

"கட்டளைக்காகக் காத்திருக்கிறோம்..."

"பிரதமரும், ஜனாதிபதியும் ஆலோசனையில் உள்ளார்கள். நம்முடைய அதிரடி நடவடிக்கை புத்திசாலித்தனமாக இருக்க வேண்டும். அதிரடி நடவடிக்கை தோல்வியுற்றால், மற்ற நாடுகள் நம்மை ஏளனமாய் பார்க்கும். அந்த நிலை தவிர்க்கப்பட வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள்."

"நம் பாம்பர் விமானிகளும், பைட்டர் விமானிகளும் மிக மிகத் திறமையானவர்கள்..."

"அது என்றோ ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. ஆனால் பாரஸ் தீவின் நிலைமை கொஞ்சம் விபரீதம். தீவின் ராணுவத்தில் இருக்கும் ஐம்பது சதவீத வீரர்கள், கர்னல்கள், மேஜர்கள், லெப்டினென்ட்கள் புரட்சியாளர்களுக்கு உதவியாக இருக்கிறார்கள். போர் நடவடிக்கையில் இந்தியா இறங்கினால்- அதன் பின்விளைவுகள் மோசமாக அமையலாம்...! ராணுவத் தளபதிகளை அழைத்திருக்கிறோம். அவர்களுடைய கருத்தை கேட்டபின்- உங்களுக்கு தகவல்கள் வரும்..."

"பார்மேஷன்களை தேர்ந்தெடுத்துவிடலாமா?"

"செய்யுங்கள். எல்லாமே தயார் நிலையில் இருக்கட்டும்.



கட்டளைகள் வந்ததும் அவர்கள் பறக்கலாம்... லீவில் யாராவது இருக்கிறார்களா?"

"ஆமாம்..."

"எத்தனை பேர்...?"

"ஒருவர்தான்."

"யார்...?"

"ஹரேஷ். ஸ்க்வாட்ரன் 401 லீடர்..."

"டெல்லியில்தானே இருக்கிறார்?"

"ஆமாம்..."

"டிபன்ஸ் காலனியா...?"

"ஆமாம்..."

"அவரை வரவழைத்துக் கொள்ளுங்கள்..."

"எல்லா ஸ்க்வாட்ரன்களும் 'அலர்ட்'டாகத்தானே உள்ளன?"

"ஆமாம்."

"கட்டளைக்காக காத்திருங்கள்..." -ரிஸீவர் வைக்கப் பட்டது.

குரூப் காப்டன் ஹர்வீந்தரும்- அந்த இரண்டு விமான லெப்டினென்ட்களும் மீர்சாகிப்போடு வெளியே வந்தார்கள். விமான நிலையம் இருட்டில் இருந்தது. 'டார்மக்'களில் மிக், ஜாக்வார் விமானங்கள்- அலுமினிய உடம்புகளை அடையாளம் காட்டிக்கொண்டு நின்றிருந்தன. ஓடுதளத்தின் இரண்டு பக்கங்களிலும்- சிவப்பு விளக்குகள் ஒழுங்கான இடைவெளிகளில் ஒளிர்ந்தன. ஏர்ட்ராபிக் கண்ட்ரோல் டவரிலும், ஆபீஸிலும் ஜன்னல்கள் வெளிச்சமாய் தெரிய- உள்ளே ஆபீஸர்கள் நிழலுருவங்களாய் தெரிந்தார்கள். க்ரூ அறையும், பிரீபிங் அறையும் இருட்டில் இருந்தன. ஓடுதளத்தை ஒட்டியிருந்த

டார்க்ஸியின் டிராக்கில் மெல்ல நடைபோட்டார்கள். 'பிளேக் போஸ்டில்' கொடி– ராத்திரிக் காற்றில் சோம்பலாய் பறந்து கொண்டிருந்தது.

நான்கு பேரும் பதற்றமாய் பேசியபடி நடந்தார்கள்.

"இந்த அதிரடி நடவடிக்கையை பாரஸ் தீவின் புரட்சியாளர்கள் எதிர்பார்ப்பார்களா?"

"நிச்சயம்..."

"எப்படி...?"

"தீவின் பிரதமர் சகோடாவை காப்பாற்ற இந்திய அரசு முயற்சி செய்யும் என்பதை எதிர்பார்த்தே புரட்சியாளர்கள் காரியத்தை நடத்தியிருப்பார்கள்."

"புரட்சியாளர்களோடு ராணுவமும் சேர்ந்து கொண்டதுதான் ஜீரணிக்க இயலாத விஷயம்... பாஸ்டர்ட்ஸ்! எப்படி சோரம் போனார்கள்?"

"எல்லாம் பணம்..."

"எப்படி...?"

"ஹார்ஷா நாடு இதன் பின்னணியில் இயங்கியிருக்கலாம்"

கிராஸ் பகுதியின் டயர் செக்கரின் கார்னருக்கு வந்ததும்– இரண்டு உயரதிகாரிகளும் தொழில்நுட்ப பகுதிக்கு போவதாக சொல்லி கழன்றுகொண்டார்கள்.

பாம்பர் பைலட் வல்லப்பும், பைட்டர் பைலட் சித்ரஞ்சனும் சிகரெட்டுகளை பற்ற வைத்துக்கொண்டார்கள். புகையை குளிர்காற்றுக்கு கொடுத்தபடியே சம்பாஷித்தார்கள்.

"ஸ்க்வாட்ரன் லீடர் ஹரேஷ் எதற்காக லீவு போட்டிருக்கிறார் தெரியுமா?"

"தெரியவில்லை..."

"வெளியே யாரிடமும் சொல்லக்கூடாது..."



"சொல்லமாட்டேன்..."

"ஹரேஷுக்கு நாளை கல்யாணம்..."

சித்தரஞ்சனின் சிகரெட் புகை அப்படியே நின்றது.

"எ... என்ன சொன்னாய்?"

"கல்யாணம்...!"

"பாப்ரே!" புகை வெளியே வந்தது.

"நாளை காலை ஆறு மணிக்கு பார்வதி கோயிலில் கல்யாணம்."

"அப்படியா?"

"இது ரகசிய கல்யாணம்."

"பெண் யார்?"

"ஏர்ஹோஸ்டஸ் செல்வி..."

"அந்த தமிழ்நாட்டுப் பெண்ணா!"

"அவளேதான்."

"எதற்காக இந்த ரகசிய கல்யாணம்?"

"இரண்டு பேர் வீட்டிலும் எதிர்ப்பு. எனவே, ரகசிய கல்யாணம். பதிவுத் திருமணம் செய்துகொண்டதும்– எல்லோருக்கும் தெரியப்படுத்தி– ஒரு வரவேற்பு ஏற்பாடு செய்துவிடலாம் என்பது ஹரேஷின் தீர்மானம்."

"பாரஸ் தீவின் மேல்– அதிரடி நடவடிக்கை இருந்தால் ஹரேஷ் உடனே ஜாக்வாரில் பறக்கவேண்டி இருக்குமே...?"

"கண்டிப்பாய்..."

"அப்படியென்றால் கல்யாணம்...!"

"பாரஸ் தீவின் பிரச்சினை தீர்ந்ததும்தான் கல்யாணம்..."

"ஹரேஷ் துரதிருஷ்டசாலி."

"பார்ப்போம்..."

"இந்த விஷயம் உனக்கு எப்படித் தெரியும்?"

"என் மனைவி ரெஜினாவுக்கு ஏர்ஹோஸ்டஸ் செல்வி நெருக்கமான தோழி."

பேசிக்கொண்டே விமானத் தளத்தின் இடப் பக்கமாய் இருந்த பழுதுபார்க்கும் பிரிவுக்கு வந்தார்கள். சர்வீஸிங்கிற்காக வந்து காத்திருந்த ஏ.வி. பி.ஏ. 256 விமானத்திற்குள்– எஞ்சின் பகுதியை– விமான விளக்கு வெளிச்சத்தில் சரிபார்த்துக் கொண்டிருந்த மாத்யூ பெட்ரோல் வாசனையோடு கீழே குதித்து அவர்களை நோக்கி வந்தார். ஐம்பது வயதுக்குரிய கனமான உடம்பு.

"ஹாய்! பாய்ஸ்... இன்றைக்கு ராத்திரி பறக்கப் போகிறீர்களா?"

வல்லப் மெல்ல புன்னகைத்தான்– சிகரெட் புகையோடு.

"அதிகாரபூர்வமான தகவல் இல்லை..."

"தகவல் வரக்கூடாது என்று வேண்டிக்கொள்ளுங்கள்."

"ஏன்?"

"பாரஸ் தீவில் நிலைமை, போர் விமானங்களுக்குச் சாதகமாக இருக்காது. எல்லைக்குள் எந்த போர் விமானம் நுழைந்தாலும் விமான தடுப்பு பீரங்கிகள் அதன் ஷெல்களை உமிழ ஆரம்பித்துவிடும். ஒரு ஷெல் பட்டாலும் போதும். ஒவ்வொரு ஜாக்வாரும், மிக்கும், நாட்டும் ஒவ்வொரு நெருப்புப் பந்துதான்..."

"மாத்யூ! ஒவ்வொரு அதிரடி நடவடிக்கையின்போதும் நீங்கள் இப்படித்தான்... அநாவசியமான பயமுறுத்தல்."

"ஹே! பாய்ஸ், இது நிஜம்... அங்கே இருக்கிற அரசியல் நிலைமையும்– ராணுவ பலமும் எனக்குத் தெரியும். நம்மிடம் இருப்பதைப் போலவே நவீன ராணுவ சங்கதிகள்– அவர்களிடமும் இருக்கின்றன. அவர்களின் ராணுவ காரிஸன்கள் அமோக பலம்... தீவு முழுக்க அடர்த்தியான காடுகள். நம் பாம்பர்



விமானங்களால் புரட்சியாளர்களின் ராணுவ முகாம்களை கண்டுபிடிக்கவே முடியாது."

"நீங்கள் அந்தத் தீவுக்கு போயிருக்கிறீர்களா... மிஸ்டர் மாத்யூ?"

"ஒரு தடவை."

"அருமையான சுற்றுலாத்தலமாமே...?"

"ஆமாம்... பாரஸ் தீவுப் பெண்கள் அழகானவர்கள். லேசாய் இந்திய வெட்கம், தங்க நிறம். தீவின் உள்பகுதியில் உள்ள பெண்கள் மேலே எதுவும் அணிவதில்லை. சுற்றுலா ரசனைக்கு அதுவும் ஒரு காரணம்..."

மாத்யூ சொல்லிக் கொண்டிருக்கும்போதே...

பக்கத்திலிருந்த பீல்ட் டெலிபோன் கிணுகிணுத்தது.

மாத்யூ அவசரமாய் ரிஸீவரை எடுத்து செவிமடுத்தார்.

"ஹலோ..."

"நான் சுக்தேவ்! வல்லப் அங்கே இருக்காரா?"

"ஆமாம்..."

"ரிஸீவரை அவரிடம் கொடுங்க"

மாத்யூ ரிஸீவரை வல்லப்பிடம் கொடுக்க... அவன் வாங்கி– "எஸ்..." என்றான்.

"வல்லப்! நாம் புறப்படுகிறோம்..."

"ஆர்டர் வந்துவிட்டதா?"

"ஆர்டர் வந்து அரை நிமிடமாகிறது."

"ஹரேஷ் பற்றி ஏதாவது தெரியுமா?"

"அவருக்குத் தகவல் போயிருக்கிறது. நாம் முதலில் புறப்படுவோம்."

"புளு பார்மேஷன்."

நீங்கள், நான், சித்ரஞ்சன்... நமக்குப் பின்னால் இரண்டாவது

பார்மேஷனில் ஸ்குவாட்ரன் லீடர் லால்ஜி, பாம்பர் ஜேம்ஸ், பைட்டர் கோபி வருகிறார்கள். நாம் எதையும் தாக்கப் போவதில்லை. குண்டு வீசப்போவதில்லை... புரட்சியாளர்களை பயமுறுத்திவிட்டுத் திரும்பப் போகிறோம்..."

## 2

"ஹரேஷ்!" தன் மடியில் தலைவைத்து கண்மூடியிருந்த ஹரேஷைக் கூப்பிட்டாள் செல்வி.

"ம்..."

"மணி எவ்வளவு தெரியுமா?" -இடம் டிபென்ஸ் காலனியில் இருக்கும் ஹரேஷின் குவார்ட்டர்ஸ். படுக்கையறை.

"எவ்வளவு?"

"பதினொண்ணே முக்கால்..."

"ப்பூ...! இவ்வளவுதானா?"

"என்ன இவ்வளவுதானா? நாளைக்கு காலையில ஆறு மணிக்கெல்லாம் நீங்களும், நானும் பார்வதி கோயில்ல இருக்கணும்."

"இதோ பார் செல்வி! இன்னிக்கு ராத்திரி பூராவும் நான் தூங்கப் போறதில்லை. உன்னையும் தூங்கவிடப் போறதில்லை. உன் மடியில நானும், என் மடியில நீயும் மாத்தி... மாத்தி படுத்து..."

"வேண்டாம் ஹரேஷ்! நான் என்னோட இடத்துக்கு போகாம இருந்தா... அங்கே இருக்கிற மத்த 'ஏர் ஹோஸ்டஸ்' ஒரு மாதிரியா 'பீல்' பண்ண ஆரம்பிச்சிடுவாங்க"

"இனிமே எதுக்காக அவங்களைப் பார்த்துப் பயப்படணும்? நாளைக்கு காலையிலதான் நம்ம கல்யாணத்தை பிரகடனப் படுத்தப் போறோமே?"



"ஹரேஷ்..."

"ம்..."

"போன மாசம் மட்டும் நாம ரெண்டு பேரும் எல்லை மீறாமே இருந்திருந்தா... இந்தக் கல்யாணத்துக்கு இப்போ இத்தனை அவசரமே படவேண்டியதில்லை..."

"எந்த மாத்திரைக்குமே அசைஞ்சு கொடுக்கலையே நம்ம மகன்."

"அதெப்படி மகன்னு சொல்றீங்க? மகளா இருக்கக் கூடாதா?"

"சரி! மகன்னே வெச்சுக்குவோம்."

"வயித்துல குழந்தையோடு தாலி கட்டிக்க உறுத்தலா இருக்கு."

"சரி... கையில குழந்தையை வெச்சுகிட்டு தாலியை கட்டிக்கிறியா?"

"உங்களுக்கு குற்ற உணர்வே கிடையாது."

"எதுக்கு குற்ற உணர்வு? நீயும், நானும் ஒருத்தரையொருத்தர் விரும்பினோம். என்னிக்காவது ஒரு நாள் தொடப்போகிற உன்னோட உடம்பை போன மாசம் டெல்லிக் குளிரைத் தாங்க முடியாம தொட்டுட்டேன். நீயும் எதிர்ப்பு காட்டாமே..."

"ஏய்! பொய்யி... பொய்யி..." ஹரேஷின் பட்டன் அவிழ்ந்த மார்பில்- தன் இரண்டு கைகளாலும் செல்வி செல்லமாய்க் குத்தினாள்.

"சரி... சரி...! நீ கொஞ்சமா எதிர்ப்பு காட்டினே! 'வேண்டாம் ஹரேஷ். இது தப்பு ஹரேஷ்! என்னை விடுங்க ஹரேஷ்! நான் போறேன் ஹரேஷ்'ன்னு சொல்லிகிட்டே என்னைக் கெட்டியா கட்டிப்பிடிச்சு..."

"பொய் சொல்லாதீங்க! எனக்கு கோபம்வரும்" செல்வி சிணுங்கிக் கொண்டிருக்கும்போதே-

குவார்ட்டர்ஸின் வாசலில் இருந்த அழைப்பு மணி

'பிங் பாங்' என்று கூப்பிட்டது. ஹரேஷை உதறிவிட்டு செல்வி பதற்றமாய் எழுந்தாள்.

"யாருன்னு தெ...தெரியலையே?"

"அட! ஏன் இப்படி பயப்படுறே?"

"நான் உள்ளே போய் ஒண்டிக்கிறேன். நீங்க போய் யாருன்னு பார்த்துப் பேசி அனுப்பிட்டு வாங்க..."

ஹரேஷ் வாசலை நோக்கி- வேகமாய் போய் கதவைத் திறந்தான். திறந்த கதவுக்கு வெளியே- முதல் வாசற்படியில்-

ஆர்டர்லி ஹைதர் நின்றிருக்க- அவனுடைய முதுகுக்குப் பின்னால் விமான நிலைய ஜீப் இருட்டில் தெரிந்தது.

ஹைதர் விரைப்பாக 'சல்யூட்' ஒன்றை விநியோகித்துவிட்டு, மெல்லிய குரலில் சொன்னான். "குரூப் காப்டன் இந்த லெட்டரைக் கொடுத்தார் ஸார்."

வாங்கிப் பிரித்தான் ஹரேஷ். கட்டளையிடுகிற தொனியில்- இரண்டே வரிகள்!

**'விடுப்பு ரத்து செய்யப்பட்டுள்ளது. விமானம் காத்திருக்கிறது. உன் சேவை நாட்டுக்குத் தேவைப்படுகிற நிமிடங்கள் இவை.'**

ஹைதரை ஏறிட்டான் ஹரேஷ்.

"என்ன... போரா...?"

"போர் மாதிரிதான். அதிரடி நடவடிக்கை..."

"எங்கே...?"

"பாரஸ் தீவா...! புரட்சியாளர்கள் ஆட்சியைப் பிடித்துவிட்டார்கள். அதிரடி நடவடிக்கை மூலம் புரட்சியாளர்களை ஒடுக்க வேண்டும். இரண்டு புளு பார்மேஷன்கள் புறப்பட்டுப் போயிருக்கின்றன. மூன்றாவது பார்மேஷனில் நீங்கள் புறப்பட்டுப் போக வேண்டும்."

"ஜீப்பில் இரு. வருகிறேன்."

ஹைதர் விரைந்து ஜீப்புக்கு போக- ஹரேஷ் உள்ளே ஓடினான். உள்ளறையில் இருந்த பீரோவை பிரிக்கிற மாதிரி



திறந்து- ஹேங்கரில் ஊஞ்சலாடிய சீருடையை அள்ளினான். அணிந்திருந்த லுங்கியை உருவிவிட்டு- உத்தியோக உடைக்குள் வேக வேகமாய் நுழைய- சுவரோரமாய் நின்றிருந்த செல்வி- மெதுவாய் அவனை நோக்கி வந்தாள். முகத்தில் விஸ்தாரமான அதிர்ச்சி.

"ஹரேஷ்..."

அவன் செல்வியை சிரிப்பில்லாமல்- கண்களில் காதல் இல்லாமல் பார்த்தான். பிறகு சொன்னான். "செல்வி! பாரஸ் தீவில் ஒரு அதிரடி நடவடிக்கைக்காக என்னை அவசரமாய் கூப்பிடுறாங்க."

"நாளைக்கு நம்ம கல்யாணம்?"

"அது நான் திரும்பி வந்ததும்..."

"ஹரேஷ்! இது நடன நிகழ்ச்சி இல்லை... தள்ளிவைக்க" ஹரேஷ் கனகச்சிதமாய் பொருத்திக்கொண்டு- தன் மார்பில், சிறகு வைத்த இந்திய சிங்கத்தைக் குத்திக்கொண்டான். செல்வியை பக்கவாட்டில் பார்த்துப் புன்னகைத்தான்.

"செல்வி! இது தேசத்தோட அழைப்பு. இந்த மாதிரியான அவசர நிமிடங்களுக்காகத்தான் என்னை வெச்சிருக்காங்க. இந்த நிமிடங்களுக்கு நான் உபயோகப்படலைன்னா இந்தத் தேசம் என்னை மன்னிக்காது."

பூட்ஸ்களை அணிந்துகொண்டான்.

"ஹரேஷ்!" கண்களில் பனிச்சிட்ட நீரோடு அவன் முகத்தைத் தன் இரண்டு கைகளினாலும் ஏந்தினாள் அவள்.

"செல்வி என்ன இது...?"

"ஹரேஷ்! எனக்கு பயமாயிருக்கு..."

"எதுக்கு பயம்...?"

"நீங்க இதைத் தவிர்க்க முடியாதா...?"

"என்னது, தவிர்க்கிறதா...? ஒரு ஏர்மேனுக்கு மனைவியாகப் போற நீ இந்த வார்த்தையைப பயன்படுத்தியிருக்கக்கூடாது"

"ஹரேஷ்! போயிட்டு எப்ப வருவீங்க...?"

"ஏறக்குறைய இது ஒரு போர் மாதிரி. ஒரே நாளில் முடியலாம். ஒரு மாசமும் இழுக்கலாம்..."

வீட்டின் பூட்டை எடுத்து அவளிடம் கொடுத்தான். "பூட்டிட்டு உன்னோட இடத்துக்கு போயிடு..."

"ஹரேஷ்!"

"ஷ்...ஹூ... பேச நேரமில்லை."

பூட்ஸ்களின் இரைச்சலோடு- வாசலில் நின்றிருந்த ஜீப்புக்கு ஓடி, முன் இருக்கையில் தாவினான்.

"ஹைதர்! வண்டியை எடு. சீக்கிரம் விரட்டு."

ஜீப் குபீரென்று கிளம்பியது.

செல்வி வாசலில் நின்று- அதன் சிவப்பு விளக்கை... பொங்குகிற கண்ணீரோடு பார்த்தாள்.

'நிமிட நேரத்துக்கு முன்பு இருந்த- அந்த சந்தோஷமெல்லாம் இப்போது எங்கே போயிற்று?'

ஜீப் குதித்து குதித்து வேகமாய் போய்க் கொண்டிருந்தது.

## 3

'ஆபீஸர்- கமாண்டிங் பிளையிங்' அறையில்- குரூப் காப்டனுக்கு முன்னால் ஹரேஷ் நின்றிருந்தான். இப்போது சீருடை மாறியிருந்தது. போர் விமானத்தில் பயணிப்பதற்கு ஏற்ற மாதிரியான உடை. உடனே விமானத்தில் பறக்கத் துடிக்கும் ஆர்வம் உடம்பு பூராவும் மோதிக்கொண்டிருந்தது. அவனுக்கு பக்கத்தில் மூன்று விமான லெப்டினென்ட்கள். எல்லோருமே இளைஞர்கள். ஹெல்மெட்டுகளை தலையில் பொருத்திக் கொண்டு- தங்களுடைய விமானங்களில் தாவும் விநாடிகளுக்காக காத்திருந்தார்கள்.



குரூப் காப்டன் நிதானமான ஆங்கிலத்தில்- ஒரு வரைபடத்தை நீண்ட குச்சியால் காட்டி- சொல்லிக்கொண்டிருந்தார். "பாரஸ் தீவு அடர்த்தியான காடுகளைக் கொண்டது. ராணுவ காரியங்களும், ட்ரூப்ஸும் கோமோ பிளாஜில் மறைந்துவிட்டால் கண்டுபிடிப்பது கஷ்டம். தீவின் முக்கிய நகரங்கள் சிராங்கா, டுப்டுன், டாமியா. இவைகளின் மேல் பறந்துவிட்டு, உடனடியாய் நீங்கள் திரும்ப வேண்டும்"

ஹரேஷ் குறுக்கிட்டுக் கேட்டான்.

"அவர்களைப் பயமுறுத்தப் போகிறோம் இல்லையா?"

"ஆமாம்..."

"ஆன்டி ஏர்கிராப்ட் பீரங்கிகளைக் கொண்டு அவர்கள் நம் விமானங்களைத் தாக்கினால்...?"

"தாக்கமாட்டார்கள்..."

"அவர்கள் தாக்கினால்...?"

"நீங்களும் பதிலடி கொடுங்கள்"

"அவர்களுடைய ராணுவ முகாம்களை அழிக்கலாமா?"

"அழிக்கலாம். ஆனால், அதிகம் வேண்டாம்... அவர்களைப் பயமுறுத்துவதுதான் நம் குறிக்கோள்..."

"நாங்கள் கிளம்பலாமா?"

"பொறுங்கள்! 'ஆர்டர்' வரட்டும்"

"அதுவரைக்கும்...?"

"அதோ கெட்டிலில் சுடச்சுட தேநீர். குளிருக்கு இதமாய் தொண்டையை நனைத்துக்கொள்ளுங்கள்" -குரூப் காப்டன் சொல்லிவிட்டு- பக்கத்து மேசையில் கிணுகிணுத்த தொலைபேசியை நோக்கிப் போனார்.

ஹரேஷ் தன் பார்மேஷனில் பறக்கத் தயாராக இருந்த அந்த மூன்று விமான லெப்டினென்டுகளை கெட்டிலுக்குப் பக்கத்தில் கூட்டிப்போய் கண்ணாடி தம்ளர்களில் டீயை சரித்துக் கொடுத்து- தானும் ஒரு தம்ளரை ஏந்திக்





கொண்டான்.

"ரகுல்! இது உனக்கு புதிய அனுபவம். உன் திறமையைக் காட்டக்கூடிய அற்புதங்கள் வரப்போகின்றன. இந்தப் போரில் உன் திறமையைக் காட்டினால்– அடுத்த போருக்கு ஒரு பார்மேஷனுக்கு நீ தலைவனாகலாம்..."

"ஹரேஷ்! இது ஒரு போரில்லை... அதிரடி நடவடிக்கை, அவ்வளவுதான். நமக்கு முன்னால் இரண்டு பார்மேஷன்கள் புறப்பட்டுப் போய்விட்டன"

"போதும்... அந்த சோட்டா தீவுக்கு ஒரு பார்மேஷனே போதும்..." ஹரேஷ் சிரித்து சொல்லிக்கொண்டிருக்கும்போதே– குரூப் காப்டன் ரிஸீவரை வைத்துவிட்டு– உடம்பில் நெருப்பு பற்றிக் கொண்ட மாதிரி திரும்பினார்.

"ஹரேஷ்! 'ஆர்டர்' கிடைத்துவிட்டது. நீங்கள் பறக்கலாம்"

அவர் வலதுகை கட்டை விரலை உயர்த்த– ஹரேஷும் மற்ற மூன்று விமான லெப்டினென்டுகளும்– ஹெல்மெட்டுகளைச் சரியாய் பொருத்திக்கொண்டு– அந்த 'பிரீபிங்' அறையிலிருந்தும் வெளியே வந்து, ஓடுதளத்தில் இருட்டில் நின்றிருந்த தத்தம் விமானங்களை நோக்கி ஓடினார்கள். ஒரே மாதிரி தாவினார்கள். பைபர் கிளாஸ் கதவுகள் அரை வட்டமாய் சுற்றிலும் மூடிக்கொள்ள– என்ஜின்கள் கதறிச் சீறின. அந்த நான்கு விமானங்களும் ஒன்றுபோல– ஓடுதளத்தில் ஓடி குபீரென்று வானில் எழும்பின.

கண் இமைக்கிற நேரத்திற்குள் அந்த எல்லையைவிட்டுக் காணாமல் போனார்கள்.

## 4

அவசர தொலைபேசி வீறிட்ட சத்தம் கேட்ட ஏ.ஸி.யில் படுத்து தூங்கிக்கொண்டிருந்த ராணுவ அமைச்சர் அம்ரிஷ்

சாத்தே- எரிச்சலோடு கண்களை மலர்த்தினார். போர்வைக்குள் இருந்து கையை நீட்டி ரிஸீவரை எடுத்தார். காதுக்குக் கொடுத்து கொட்டாவி கலந்த குரலில்- "ஹலோ" என்றார்.

அமைச்சக கமாண்ட் நிலையத்திலிருந்து- அவருடைய அந்தரங்க செயலாளர் பேசினார்.

"ஸார்... நான் லால்..."

"என்ன...?"

"கமாண்ட் நிலைய டெலிபிரிண்டரில் ஒரு எச்சரிக்கை செய்தி தொடர்ந்து வந்துகொண்டிருந்தது..."

"எச்சரிக்கை செய்தியா?"

"ஆமாம்..."

"என்ன எச்சரிக்கை...?"

"காண்டாக்ட் வயர்லஸ் டு நாட் திரீ! யுவர் டிபன்ஸ் மினிஸ்டர் வாண்டட்... இப் பெயில்ஸ்... மார்ச்சுவரி ஹவுஸ்புல்..."

"ஒயர்லஸ் டு நாட் திரீயை காண்டாக்ட் பண்ணிப் பார்த்தீர்களா?"

"பார்த்தோம்..."

"யார் பேசுகிறார்கள்...?"

"பேசுவது யாரென்று தெரியவில்லை. எங்கிருந்து பேசுகிறார்கள் என்பதும் புரியவில்லை. நீங்கள் லைனை தொடர்புகொண்டால்- உண்மை நிலை புரியக்கூடும் ஸார்."

"அமைச்சக நிலையத்தில் யார் யார் இருக்கிறார்கள்?"

"சீப் கமாண்டிங் ஆபீஸர்... டெப்டி சி...ஓ...சி...ஆர்... ஆப்ரேட்டர்ஸ்."

"நான் வர்றேன்."

ராணுவ அமைச்சர் அம்ரிஷ் சாத்தே இரவு கவுனோடு அறையினின்றும் வெளிப்பட- வாசலில் துப்பாக்கிகளோடு



காத்திருந்த சென்ட்ரிகள் விறைப்புக்கு வந்தார்கள். அவர்களுக்கு கண்ணைக் காட்டிவிட்டு- கட்டடம் முன்புறம் இருந்த- அமைச்சக அலுவலகத்தை நோக்கிப் போனார் அமைச்சர்.

அலுவலக வாசலில் காத்திருந்த லால் உள்ளே கூட்டிப்போய் டெலிபிரிண்டர் வாசகத்தைக் காட்டினார்

CONTACT WIRELESS TWO NOT THREE YOUR DEFENCE MINISTER WANTED. IF FAILS MORTUARY HOUSE FULL.

"டெலிபிரிண்டர் இதே வாக்கியத்தை நூற்றுக்கணக்கான தடவைகள் அடித்துத் தள்ளிவிட்டது" ..............................

லால் சொல்ல- அமைச்சர் கட்டுப்பாட்டு அறைக்குள் நுழைந்தார். இரைந்துகொண்டிருந்த வயர்லெஸ் அருகே நின்றிருந்த சி.ஓ. சல்யூட் பதித்து விறைப்பானார்.

"வயர்லெஸ் டு நாட் திரீ... பிரீக்வென்ஸியை தொடர்பு கொள்ள- மைக்ரோ போனை கொடுங்க..."

அவர் கொடுத்தார்.

மைக்ரோ ரிசீவர்களை இரண்டு காதுகளுக்கும் கவசமாய் அணிந்துகொண்டார். குரல் கொடுத்தார். "திஸ் இஸ்... இந்தியா இந்தியா டிபென்ஸ் மினிஸ்டர்ஸ்... கமாண்டிங் ஆபீஸ்..."

"ர்ர்ர்ர்ர்ர்ர்ர்..."

"டிபென்ஸ் மினிஸ்டர் அம்ரிஷ் சாத்தே ஹியர்."

தெளிவான ஆங்கிலத்தில் குரல் வந்தது. "தொடர்பு கொண்டமைக்கு நன்றி... அமைச்சர் அவர்களே! நான் தோம்ஸன் ராஜுக். பாரஸ் தீவு புரட்சிப்படை தளபதி பேசுகிறேன்... நான் பேசுவது உங்களுக்குத் தெளிவாகக் கேட்கிறதா?"

"கேட்கிறது."

"எங்கள் புரட்சிப்படை பிரதமர் சகோடாவின் ஆட்சிக்கு சாவுமணி அடித்துவிட்டு- புதிய ஆட்சி முறையை அமைக்கப் போகிறோம். இது எங்கள் நாட்டு அரசியல் விவகாரம்... இந்தியா இதில் தலையிடக்கூடாது என்று விரும்புகிறோம்.

இந்தியா இதில் தலையிடுமானால் நிலைமைகள் விபரீதமாகும்."

"பிரதமர் சகோடா இந்திய நாட்டுக்கு நண்பர். இந்தியாவோடு வியாபார ரீதியாகவும்– அரசியல் ரீதியாகவும் பல ஒப்பந்தங்களை செய்துகொண்டவர். அவர் தற்போது உங்கள் தீவிலுள்ள எங்கள் தூதரகத்தில் சரணடைந்துள்ளார். சரணடைந்தது மட்டுமில்லாமல்– ஆட்சியை மீட்டுக் கொடுக்கும்படி எங்களிடம் உதவி கோரியுள்ளார். உங்கள் பிரதமர் உதவி கேட்டுள்ளதால்– நாங்கள் அந்த உதவியைச் செய்யவேண்டிய கடமையில் உள்ளோம்..."

"அது எங்கள் தேசப் பிரச்சினை... நீங்கள் தலையிடாமல் இருப்பது உத்தமம்..."

"இந்தியா என்றைக்குமே வன்முறைகளைத் தேடிப்போகாது... சகோடாவின் ஆட்சியை நீங்கள் பிடித்தமுறை நயவஞ்சகமானது. ஜனநாயக ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு– ராணுவ ஆட்சியைத் தொடங்க முயற்சி பண்ணும் உங்கள் அநியாயப் போக்கை இந்தியா வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காது."

"இதுதான் உங்கள் இறுதி முடிவா...?"

"ஆமாம்..."

"அதாவது... போர்?"

"ஆமாம்..."

"அப்படியானால் எங்கள் தரப்பில் நாங்கள் செய்யப் போகும் சில நல்ல காரியங்களைச் சொல்லட்டுமா?"

"நல்ல காரியங்களா?"

"ஆமாம்...! பாரஸ் தீவில் இருக்கும் இந்திய தூதரகத்தில் எங்கள் முன்னாள் பிரதமர் சகோடா சரண் அடைந்தது பழைய செய்தி. இப்போது இங்கே உள்ள புது செய்தியை சொல்லட்டுமா?"

"புது செய்தியா...?"

"ஆமாம்...! இந்திய தூதரகம் இப்போது எங்கள் கையில். உங்கள் இந்திய தூதர் புருஷோத்தம் தோஷியும், அவருடைய



மனைவி சுமித்ராவும், மகள் பிரார்த்தனாவும், முன்னாள் பிரதமர் சகோடாவும் எங்கள் துப்பாக்கிகளுக்கு முன்னால் மண்டியிட்டு உட்கார்ந்திருக்கிறார்கள். நாங்கள் நினைத்தால் இந்தக் கணமே நான்கு பேரையும் குண்டுகளால் துளைத்து தீர்க்க முடியும். இந்த நான்கு பேர் மட்டுமில்லை... பாரஸ் தீவின் பாராளுமன்றத்தைச் சேர்ந்த எழுபத்தேழு உறுப்பினர்களையும்– அத்தீவின் முக்கிய நகரமான ஹார்மோஷாவின் தெருவில் நீளமாய் நிற்க வைத்து எல்லோரையும் துப்பாக்கித் தோட்டாக்களுக்கு இலக்காக் கொடுத்து பிண அறையை நிரப்ப முடியும். முக்கிய தலைவர்களைக் கொன்று, தீவில் இருக்கும் ஒவ்வொரு ஆஸ்பத்திரியின் பிண அறையையும் 'ஹவுஸ்புல்' ஆக்க முடியும்"

ராணுவ அமைச்சர் வார்லெவின் பிரண்டார். "இந்திய தூதரக குடும்பத்தை சிறைப் பிடித்திருப்பது உலக தூதரகத்தின் விதிகளுக்கு முரணானது"

"அந்த விதிகளைப் பற்றி நாங்கள் கவலைப்படவேண்டியதில்லை. எங்கள் ஆட்சிக்கு எதிராக செயல்படும்... எந்த ஒரு தீவிரவாதியையும் நாங்கள் விட்டுவைக்கப் போவதில்லை. உங்களுடைய இந்தியத் தூதரையும், அவருடைய மனைவி– மகளையும், எங்கள் முன்னாள் பிரதமர் சகோடாவையும் நீங்கள் காப்பாற்ற விரும்பினால்..."

சில விநாடி மவுனம்.

ராணுவ அமைச்சர் கேட்டார். "விரும்பினால்...?"

"இந்தியா எங்களை கண்டு கொள்ளக்கூடாது... எங்கள் புரட்சிப் படையை நசுக்க எந்த ஒரு ராணுவ முயற்சிகளையும் மேற்கொள்ளக் கூடாது. எங்கள் நடவடிக்கைகளை கண்டித்து உலக நாடுகளுக்கு முன் அறிக்கையை வைக்கக்கூடாது. இதை நீங்கள் மிரட்டல்களாக எடுத்துக்கொண்டாலும் சரி... கோரிக்கைகளாக எடுத்துக்கொண்டாலும் சரி... உணர்ந்து செயல்படுங்கள். உணர்ந்து செயல்படாவிட்டால்– பிண அறை 'ஹவுஸ்புல்.' அதற்கு முதல் பலி இந்திய தூதரும், அவருடைய குடும்பமும்..."

வயர்லெஸ் மவுனமாயிற்று.

அமைச்சர் மைக்ரோ ரிசீவர்களை காதுகளிலிருந்து அகற்றினார். சி.ஓ.வை ஏறிட்டார்.

"அதிரடி நடவடிக்கைக்கு 'ஆர்டர்' கொடுத்து எவ்வளவு நேரமாயிற்று?"

"அரை மணி நேரம்..."

"புளூ பார்மேஷனில் எத்தனை விமானங்கள் பாரஸ் தீவை நோக்கிப் போயிருக்கின்றன?"

"மொத்தம் பத்து... ஐந்து ஜாக்குவார், ஐந்து மிக்..."

"அந்த விமானங்களைத் திரும்ப அழைக்க வேண்டும்..."

"அது இயலாத காரியம் ஸார்..."

"வயர்லெஸ்ஸில் தொடர்புகொண்டு பாருங்கள்..."

அங்கிருந்த அதிகாரிகள் பரபரவென்று செயல்பட்டார்கள். தலைமை ராணுவ கேந்திரத்தைத் தொடர்புகொண்டு சங்கேத மொழிகளில் வேகமாய்ப் பேசினார்கள்.

சில நிமிடங்களுக்குப் பின்...

ராணுவ அமைச்சரிடம் திரும்பினார்கள்.

"விமானங்கள் இப்போது நம் கட்டுப்பாட்டில் இல்லை ஸார்... அவைகள் பாரஸ் தீவை நெருங்கிக்கொண்டிருக்கின்றன..."

ராணுவ அமைச்சரின் வயிற்றில் ஒரு பயம் முடிச்சிட்டுக் கொண்டது... இறுக்கமாய், சிக்கலாய்.

# 5

பாரஸ் தீவு பூராவும் பதற்றம் பரவியிருந்தது. முக்கியமாய் ஹார்மோஷா நகரில் எல்லாத் தெருக்களிலும் ஒரு பயங்கரம் உறைந்து போயிருந்தது.

நள்ளிரவு.



முதுகில் 'ஹெவர் ஹாக்' அணிந்து, சாம்பல் வண்ண மொடமொடப்பான சீருடைகளுக்குள் கச்சிதமாய் நுழைந்து 'லைட் மெஷின் கன்'களோடு ஜவான்கள்- ரோட்டோரங்களில் பதுமைகளாய் நின்றிருந்தார்கள். மார்பையும், முதுகையும் கவசமாய் இணைக்கும் அம்யூனிஷனின் சின்னச்சின்ன அறைகளுக்குள் தோட்டாக்கள் தூங்கிக்கொண்டிருந்தன. ஒரு சிலரிடம் ரேடியோ தொடர்புக்கான 'வயர்லெஸ்' சங்கதிகள். அவைகள் ஓயாமல் சத்தம் போட்டன. எல்லாமே கட்டளைகள்.

"செக்ஷன் ஒன் அலர்ட் போா."

"ஸார்..."

"தெருக்களில் ஏதாவது அசம்பாவிதம்?"

"ஒன்றுமில்லை."

"நிசப்தமா இருக்கா?"

"மயான நிசப்தம்."

"குட்! குரேனெட் கைவெடிகளோடு சகோடாவின் ஆதரவாளர்கள் சிலர்- தீவின் தெற்குப் பகுதியில் லேசாய் வாலாட்ட ஆரம்பித்துள்ளார்கள். அவர்களில் பாதி பேர் கொல்லப்பட்டுவிட்டார்கள். மீதிபேர் வடக்குப் பக்கமாய் நகர்ந்து வரலாம். தாக்குதலை ஆரம்பிக்கலாம்..."

"அவர்களுக்காக 'லைட்மெஷின் கன்'கள் வாயைத் திறந்துகொண்டு காத்திருக்கின்றன..."

'ரோடுகளில் எந்த மக்கள் எதிர்பட்டாலும் சரி... அது பெண்ணாக இருந்தாலும் சரி... குழந்தையாக இருந்தாலும் சரி... உடம்பை சல்லடைப் போட்டுவிடுங்கள்..."

"ரோஜர்...ர்ர்..."

"படைத்தளபதி ஹெண்டர்ஸன் உங்கள் பகுதியைப் பார்வையிட அடுத்த சில நிமிடங்களில் காரில் வருகிறார்.

ரோட்டோரமாய் கிடக்கும் பிணங்களை மறைவிடங்களுக்குக் கொண்டுபோய் குவித்து வையுங்கள்..."

"ரோஜர்ர்ர்..."

எல்லா ஜவான்களுக்கும் உத்தரவு போயிற்று. ரோட்டோர பிளாட்பாரங்களில் மல்லார்ந்து கிடந்த பிணங்களை– அழுக்குக் கோணிகளாய் பாவித்து தரதரவென்று இழுத்துப்போய்– மரங்களுக்குப் பின்னால் தள்ளினார்கள்.

"ஹேய்! ரூபாஸ்... இன்று அதிகாலையில் ஒரு மலேசியப் பெண்ணின் வீட்டுக்குள் நுழைந்தோமே...?"

"ஓ...! இனிமையான அனுபவம்."

"மகளைக் காட்டிலும் தாய் அழகு..."

இன்னொருவன் சிரித்தான்.

"இளம் பெண்களா கிடைக்கமாட்டார்கள்?"

திடீரென்று 'சைரன்' வீறிட்டது. எல்லா ஜவான்களும் வேகமாய் இடம் பெயர்ந்து– ஒரே வரிசையில் நின்று– துப்பாக்கிகளையும், லைட் மெஷின் கன்களையும் உயர்த்தினார்கள். காத்திருந்தார்கள். சைரன் வீறிட்டு வீறிட்டு அடங்க–

அந்த வேன் வேகமாய் ரோட்டின் வளைவில் திரும்பி– ஜவான்களை நோக்கி வந்து– வேகத்தைக் குறைத்துக்கொண்டு நின்றது. வேனின் பைபர் கிளாசுக்குப் பின்னால்– ஹெண்டார்ஸனின் சதுரமான பழுப்பு நிற முகம் தெரிந்தது. எல்லோரும் துப்பாக்கிகளை உயர்த்தி 'சல்யூட்' அடிக்க– ஹெண்டார்ஸன் இறங்கினான்.

அசர வைக்கிற உயரம். தின்ற மாட்டுக்கறியும், பன்றிக்கறியும் கை புஜங்களில் தெரிந்தன. பெரிய மீசைக்குக் கீழே– உதடுகள் எதையோ மெல்லுவதில் தீவிரம் காட்டிக் கொண்டிருந்தன. அலட்சிய நடைபோட்டு ஜவான்களுக்கு மத்தியில் வந்து நின்றான்.



"செக்ஷன் ஒன் அன்ட் டூ...?"

"எஸ்... ஸார்..."

மார்பில் குத்தப்பட்ட அடையாளத் தகட்டோடு காப்டன் முன்னால் வந்தான்.

"இந்தத் தெருவில் எத்தனை பேரைக் கொன்றீர்கள்?"

"இருபத்தேழு பேர்...?"

"எல்லாருமே பொதுமக்களா?"

"ஆம்..."

"பெண்கள்...?"

"எட்டு பேர்..."

"விடிவதற்குள் பிணங்களை எரித்துவிட வேண்டும். இறந்தவர்கள் எல்லோருமே சாதாரணமானவர்கள்தானே...?"

"ஆமாம்..."

"முக்கியப் புள்ளிகள் யாரும் இல்லையே...?"

"இல்லை..."

ஹெண்டார்ஸன் சங்கேத மொழியில் சில கட்டளைகளைப் பிறப்பித்துவிட்டு வேனுக்குள் நுழைந்துகொள்ள– அது புறப்பட்டது.

தெருவின் மறுமுனையைத் தாண்டுவதற்குள்– வேனுக்குள் இருந்த வயர்லெஸ் சாதனம் நடுக்கமாய் கூப்பிட்டது. "பீங்க்க்... பீங்க்க்...பீங்க்க்..."

ஹெண்டார்ஸன் மைக்ரோ ரிசீவர்களை காதுகளில் பொருத்திக்கொண்டான். தொண்டை பாகத்திற்கு சற்று மேலாக– மைக்ரோபோன் நீண்டது.

"ஹெண்டார்ஸன்."

"ஆன்...த...லைன்..."

"நான் காஷ்மோ..."

"லெப்டினென்ட் கர்னல்...?"

"ஆமாம்..."

"என்ன விஷயம்...?"

"இந்தியப் போர் விமானங்கள் நம் பாரஸ் தீவின் எல்லைக்குள் நுழைந்திருக்கின்றன..."

"ராடரில் தெரிகிறதா...?"

ஆமாம்..."

"மொத்தம் எத்தனை விமானங்கள்?"

"பத்து..."

"நம் ராணுவ காரிஸான்களை தாக்க முயற்சிக்கிறதா?"

"இல்லை..."

"பின் என்னதான் செய்கிறார்கள்...?"

"தாழ்வாய் பறந்து பிறகு உயர்கிறார்கள்..."

"வேவு பார்ப்பதற்கு வந்திருக்கலாம். பாடம் புகட்டுங்கள்"

"என்ன செய்யலாம்...?"

"ஆன்டி ஏர் கிராப்ட் பீரங்கிகளைக்கொண்டு சுட்டு வீழ்த்துங்கள்..."

"அவர்கள் நம்மைத் தாக்கவில்லையே...?"

"நான் இந்திய ராணுவ அமைச்சருக்கு எச்சரிக்கை விடுத்த பின்பும் இந்தப் போர் விமானங்கள் வந்திருக்கின்றன... சுட்டுத் தள்ளுவதுதான் நாம் அவர்களுக்கு கொடுக்கும் தண்டனை."

"நாம் சுட ஆரம்பித்தால் நிலைமை விபரீதமாகலாம்."

"எப்படிச் சொல்கிறீர்கள்...?"

"வந்திருக்கிற விமானங்களில் மூன்று பாம்பர்... மூன்று பைட்டர் விமானங்கள். நாம் சுட்டால் அவர்களும் திருப்பித் தாக்கலாம். பாம்பர் விமானங்கள் 'பாம்ப்' செய்தால் நம் ராணுவ காரிஸான்கள் சர்வ நாசமாகும்..."



"இந்தக் கோழைத்தனமான யோசனைகள் எனக்கு வேண்டாம். அந்த விமானங்களை சுட்டு வீழ்த்துங்கள். நான் அங்கே வரட்டுமா...?"

"வேண்டாம்... நானே பார்த்துக் கொள்கிறேன்."

லைன் அணைந்தது.

ஹெலன்டார்ஸன் ஆத்திரமாய் வேன் டிரைவரைப் பார்த்து கத்தினான். "டோனி"

"ஸார்..."

"வேனை இந்திய தூதரகத்துக்கு விரட்டு."

டிரைவர் டோனி- வேனை சைரனின் வேகமான அலறலோடு- ஹார்மோஷாவின் தெருக்களில் விரட்டினான்.

## 6

அந்தக் கறுப்பு வானத்தில் ஹரேஷின் விமானம்- பாரஸ் தீவின் அடர்த்தியான காடுகளுக்கு மேல்- கொஞ்சம் தாழ்வாய் பறக்க- அவனுக்கு இரண்டு பக்கங்களிலும்- பாம்பர், பைட்டர் விமானங்கள் பறந்து வந்தன. நூல் பிடித்த மாதிரி மூன்றும் ஒரே நேர்கோட்டில் நீந்தின.

மைக்ரோபோனில்- பாம்பர் விமானியையும், பைட்டர் விமானியையும் தொடர்பு கொண்டு ஹரேஷ் கரகரத்தான்.

"இலக்கை நெருங்கிவிட்டோம்..."

"இலக்கை நெருங்கி என்ன பயன்...? ராணுவ காரிஸான்களைத் தாக்க நமக்கு உத்தரவு இல்லை."

"அடர்த்தியான காடுகள் என்றாலும்... ராணுவ கேந்திரங்களும், துறைமுக சாதனங்களும் அப்பட்டமாகத் தெரிகின்றன"

நமக்கு முன்னால் வந்த இரண்டு பார்மேஷன்களைக்

காணோம். திரும்பிவிட்டார்களா...?"

"ஆமாம்..."

"தீவை இரண்டு முறை சுற்றி- அவர்களுக்கு பயம் காட்டிவிட்டு நாமும் திரும்ப வேண்டியதுதான்..."

"காப்டன்! இது வேண்டாத வீண் வேலை..."

திடீரென்று அந்தச் சத்தம் கேட்டது.

"ட்ட்டுடும்..."

ஹரேஷ் திடுக்கிட்டு கீழே பார்த்தான். இருட்டில் சின்னச் சின்ன குட்டி யானைகளாய் டாங்கிகள் தெரிய- அவைகளைச் சுற்றிலுமாய் பரவலாய் டிரக்குகள், ஆர்மர் கார்கள், ஜீப்கள்- நட்சத்திர வெளிச்சத்தில் தெரிந்தன. ஆகாயத்தை நோக்கி நீண்ட- ஆண்டி ஏர்கிராப்ட் பீரங்கிகளில்- சில நெருப்பு வாயோடு- விமானங்களைப் பார்த்து சீறின.

"காப்டன்! அவர்கள் நம்மை சுடுகிறார்கள்."

"விமானங்களை நேர் கிழக்காக திருப்புங்கள்."

"நாம் தாக்க வேண்டாமா...?"

"தாக்கலாம். முதலில் பீரங்கிகளின், ஷெல்களிலிருந்து தப்பிக்க வேண்டும். ஒரு ஷெல் பட்டாலும் நம் விமானங்கள் தீப்பந்தமாக மாறிவிடும்."

விமானங்கள் ஜிவ்வென்று உயர்ந்தன.

பீரங்கி ஷெல்கள் தாறுமாறாய்- இலக்கு தவறி கறுப்பு வானத்தில் பாய்ந்து அணைந்து போயின. பிரகாசமான மஞ்சள் வெடிகள் பிரசவித்த அடர்த்தியான புகை ராத்திரி நேரக் குளிர் காற்றில் கோலம் போட்டன.

"சரியான உயரத்துக்கு வந்துவிட்டோம்..."

"காப்டன்! இனித் தாக்குதலை ஆரம்பிக்கலாமா...?"

"ஆரம்பிக்கலாம்..."



பைட்டர் விமானத்தின் இரண்டு இறக்கைகளிலும் பொருத்தப்பட்டிருந்த- ஏர் இண்டேன் துப்பாக்கிகள் திடும்மென்று செயல்பட்டன. புளிச் புளிச்சென்று குண்டுகளை ரத்த நிறத்தில் துப்ப-

வரிசையாய் தீச்சரங்கள் தீவை நோக்கி இறங்கின. சில விநாடிகளில்- அடர்த்தியான காடுகளில் மறைந்திருந்த இரண்டு ராணுவ ஹாரிஸான்கள் அவசர அவசரமாய் தீப்பற்றிக்கொண்டு வெடித்தன. "டொம்ம்ம்..."

"அபாரம்! நண்பனே!"

கீழே இருட்டில்- எல்லோரும் குழப்பமாய் ஓடுவது தெரிந்தது. ஆண்டி ஏர்கிராப்ட் துப்பாக்கிகள் சீற்றமாய்- நாலா பக்கமும் உயர்ந்து- பீரங்கி ஷெல்களை வெளிச்சமாய் துரத்தின.

"காப்டன்! கண்டபடி சுடுகிறார்கள்."

"கோபம்... தலைக்கேறிய கோபம்..."

"எல்லாவற்றையும் அழித்துவிடலாமா?"

"வேண்டாம்... நமக்கு உத்தரவில்லை. நாம் நம்மை பாதுகாத்துக்கொண்டு திரும்ப வேண்டும். புதிதாய் உத்தரவு பெற்றுவந்து இங்கே ஒரு பிரளயத்தை உண்டாக்குவோம்..."

மைக்ரோபோனில் ஹரேஷ் கரகரத்துக்கொண்டிருக்கும் போதே- அவனுடைய விமானம் சட்டென்று உயரமிழக்க ஆரம்பித்தது.

பைட்டர் விமானி கத்தினான்.

"காப்டன்! உங்கள் விமானம் ஏன் உயரமிழக்கிறது?"

"தெரியவில்லை..." சொன்ன ஹரேஷ் தனக்கு முன்னால் இருந்த பானலை பார்த்தான். எல்லாமே தம் கடமைகளை மறந்து ஸ்தம்பித்துப் போயிருந்தன.

ஹரேஷ் கவலையானான்- "என்னாயிற்று... எரிபொருள்

…ாங்கில் ஏதாவது அடைப்பா...?"

"ஆம்" என்றது பியூவல் காஜ்.

"காப்டன்! காப்டன்! உங்கள் விமானத்திற்கு என்… யிற்று...?"

"டர்பைன் கெரொஸின் டாங்க்கில் ஏதோ அடைப்பு..."

"சரி செய்ய முடியுமா...?"

"முயற்சி செய்து பார்க்கிறேன்..." ஹரேஷ் சொன்ன விநா… மானம் இன்னமும் அதிர்ந்து– பூமியை குறிவைத்து– மூக்… டிக்கொண்டு இறங்கிற்று. ரட்டர், பிட்ச் கண்ட்ரோ… ல்லாமே ஊனங்களாக மாற–

ஹரேஷ் சக விமானிகளுக்கு தகவல் அனுப்பினான்.

"நண்பர்களே! நான் எந்த நிமிடத்திலும் பூமியோ… ாதிவிடுவேன். எஜக்ஷன் லீவரை உபயோகப்படுத்… ராசூட்டோடு நான் கீழே குதிக்கப்போகிறேன்"

"கா...காப்டன்...!" மூன்று விமானங்களில் இருந்… விமானிகள்– மைக்ரோ ரிசீவர்களில் திடுக்கிட்டார்க… ரேஷின் விமானம் உயரமிழப்பதை– அந்த இருண்… ானத்தில் பார்த்தார்கள்.

"என்னோடு ஒத்துழைத்த உங்களுக்கு என் நன்… ண்பர்களே! பத்திரமாக இந்தியாவுக்குத் திரும்புங்கள். எனக்… யுள் கெட்டியாக இருந்தால், மறுபடியும் சந்திப்போ… ல்லையென்றால் குட்...பை..."

கார்ட்ரிட்ஜைத் திறந்துகொண்டு– முதுகில் சுமந்… ாராசூட்டோடு– கீழே குதித்தான் ஹரேஷ்.

வெளியே காத்திருந்த அதிகப்படியான குளிர்காற்று… அவன் மூச்சை திணற வைத்தது. முதல் இருநூ… அடிகள்– பாராசூட் திறந்துகொள்ளாமல் அடம்பிடித்த… பின் சோம்பலாய்– 'போனால் போகிறது' என்கிற பாணியில்



குடையைப் போல் விரிந்தது.

ஹரேஷின் உடம்பு இலவம் பஞ்சானது.

வேகமாய் அடித்த காற்று– அவனை தள்ளிக்கொண்டே போக– முன்பின் தெரியாத இந்தத் தீவில் மெல்ல மெல்ல இறங்க ஆரம்பித்தான் ஹரேஷ்.

செல்வியின் ஞாபகம் வந்தது.

'நான் புரட்சிப் படையிடம் சிக்கி இறந்து போனால்– செல்வி என்ன செய்வாள்...?'

## 7

இந்திய தூதரகத்துக்கு முன்னால் அந்த வேன் நிற்க– ஹெண்டார்ஸன் கோபமாய் இறங்கினான். வாசலில் கனமான கண்களோடு நின்றிருந்த செண்ட்ரிகள்– அட்டென்ஷனுக்கு வந்தார்கள். சல்யூட் பதித்தார்கள்.

ஹெண்டார்ஸன் விறைப்பாய் நடந்து உள்ளே போனான். நட்சத்திர பட்டைகளை தரித்து– சீருடைக்குள் புகுந்திருந்த உயரதிகாரிகள் அவனை எதிர்கொண்டார்கள்.

ஹெண்டார்ஸன் சொன்னான்:

"இந்திய ராணுவ அமைச்சர் நம் எச்சரிக்கையை அலட்சியப் படுத்திவிட்டு– தாக்குதல் நடத்த போர் விமானங்களை அனுப்பியுள்ளார்..."

"அதிகப்படியான துணிச்சல்..."

"அந்தத் துணிச்சலுக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க வேண்டும்."

"நிச்சயமாய்..."

"என்ன செய்யலாம்...?"

"நம்மிடம் சிக்கியுள்ள இந்திய தூதரகக் குடும்பத்தைச் சேர்ந்த நபர் ஒருவரைக் கொன்று..."

"வேண்டாம்... அந்தத் துருப்புச்சீட்டுகள் நம் கைவசம் இருக்கவேண்டியவை. நான் வேறொரு ஏற்பாட்டோடு வந்திருக்கிறேன்."

இந்தத் தீவின் பாராளுமன்றத்தைச் சேர்ந்த எழுபத்தேழு எம்.பி.களில் முப்பத்தெட்டு பேர்களை- டிரக்குகளில் ஏற்றி வார்ஷா வயல்வெளிக்கு கொண்டு போகிறோம்..."

"கொண்டுபோய்...!"

"முதலில் அவர்களை வயல்வெளிக்கு கொண்டுபோக ஏற்பாடு செய்யுங்கள். நான் இன்னும் அரை மணி நேரத்தில் அங்கே வருகிறேன்..."

இரண்டு அதிகாரிகள் சல்யூட்டை செலுத்திவிட்டு நகர்ந்தார்கள். ஹெண்டார்ஸன் மாடிப்படிகளில் ஏறி- வராந்தாவில் இருந்த முதல் அறைக்குள் நுழைந்தான்.

அந்தப் பெரிய அறையின் உட்புறச் சுவர்களில் ஓரமாய் ஐந்தடிக்கு ஒரு ஜவான் வீதம் கையில் இயந்திர துப்பாக்கியோடு நின்றிருக்க- நடுவே இருந்த சோபாக்களில்- இந்திய தூதர் புருஷோத்தம் ஜோஷியும், அவர் மனைவி சுமித்ராவும், மகள் பிரார்த்தனாவும் சோர்ந்த முகங்களோடு உட்கார்ந்திருக்க- தீவின் பிரதமர் சகோடா எதிர் சோபாவில் கவலையாய் தெரிந்தார். ஹெண்டார்ஸன் மெல்ல புருஷோத்தம் ஜோஷியை நெருங்கினான்.

"மிஸ்டர் ஜோஷி! உங்கள் உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்கிற அக்கறை இந்திய அரசுக்கு இல்லை போலிருக்கிறது..."

ஜோஷி ஒன்றும் பேசாமல்- ஹெண்டார்சனையே பார்த்தார். அவன் தொடர்ந்தான். "போர் விமானங்களை அனுப்பி இருக்கிறார்கள். நான் கொடுத்த எச்சரிக்கையை



அலட்சியப்படுத்திவிட்டார்கள்..."

ஜோஷி புன்னகைத்தார்.

"இந்திய அரசு எது செய்தாலும் அது சரியாகவே இருக்கும்..."

"அவர்களுடைய நடவடிக்கை சரியென்றா சொல்கிறீர்கள்?"

"ஆமாம்..."

"அவர்கள் எடுத்திருக்கும் சரியான நடவடிக்கைக்கு நானும் ஒரு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டாமா மிஸ்டர் ஜோஷி? அந்த நடவடிக்கையை எடுக்கத்தான் வந்திருக்கிறேன்... கொஞ்சம் அதிர்ச்சியான நடவடிக்கை."

ஜோஷியும், மற்றவர்களும் திகைப்பாய்- குழப்பமாய் ஹெண்டார்சனையே பார்த்துக்கொண்டிருக்க- அவன் வலுக்கட்டாயமாய் ஒட்ட வைத்துக்கொண்ட ஒரு புன்னகையுடன் சொன்னான்.

"இந்தத் தீவின் எம்.பி.களில் பாதி பேரை வார்ஷா வயல்வெளியில் வைத்து துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப் போகிறோம். அந்த மரண விழாவுக்குப் பின் ஒரு போட்டியை நடத்தப்போகிறோம்..."

"........."

"என்ன போட்டி என்று கேட்கமாட்டீர்களா...? பரவாயில்லை... நானே அந்தப் போட்டியைப் பற்றிய விபரத்தை சொல்லிவிடுகிறேன். உங்களுடைய அழகான மகள் பிரார்த்தனாவின் அழகு எத்தனை ஜவான்களுக்குப் பிடிக்கும் என்பதை..."

"நோ..." ஜோஷி எழுந்து நின்று கத்தினார்.

ஹெண்டார்ஸன் புன்னகைத்துக் கையமர்த்தினான். "மிஸ்டர் ஜோஷி! இந்தியாவுக்கு எதிராய் நான் எடுத்த நடவடிக்கைகள் சரிதானே...?"

"வேண்டாம்..."

"வேண்டாம் என்று நீங்கள் நினைத்தால்– இந்திய இந்த பாரஸ் தீவு விவகாரத்தில் தலைவிடக்கூடாது. தன் நின்று மற்ற நாடுகளைப் போல் வேடிக்கைப் பார்க்க வேண்டும். அதை விட்டுவிட்டு போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டால்– பிரார்த்தனாவின் உயிருக்கும், உங்கள் மூன்று பேர்களின் உயிர்களுக்கும் என்னால் உத்தரவாதம் கொடுக்க முடியாது."

"நா...நான் இந்தியாவின் ராணுவ அமைச்சரையும் பிரதமரையும் தொடர்புகொள்கிறேன்."

"நீங்கள் தொடர்புகொண்டு– அவர்களிடமிருந்து எனக்கு நல்ல பதில் கிடைக்கும்வரை– உங்கள் பெண் பிரார்த்தனா என்னுடைய பாதுகாப்பில் ஒரு ராணுவ முகாமில் இருப்பாள். இந்தியாவின் போர் நடவடிக்கை தொடருமானால், என்னுடைய எதிர் நடவடிக்கையும் பிரார்த்தனா மேல் ஆரம்பமாகும்."

"கொல்வதானால் எங்களைக் கொல். அவளை ஒன்றும் செய்ய வேண்டாம்."

"அந்த நல்ல காரியம் பிறகு. இப்போது பிரார்த்தனா என்னோடு வரவேண்டும்..."

அந்த அழகான இருபது வயது பிரார்த்தனா தன் 'வெல்வெட்' முகத்தில் வியர்த்துக்கொண்டே– தன் தாயை நெருங்கி உட்கார்ந்தாள். 'வரமாட்டேன்' என்பது போல் தீர்க்கமாய் தலையாட்டினாள்.

ஹெண்டார்ஸன் சிரித்தான்.

"பிரயோஜனமில்லை பெண்ணே! நீ இவ்வளவு காற்றைத் தான் சுவாசிக்க வேண்டும் என்கிற அளவுக்குக்கூட என்னால் ஒரு சட்டத்தைக் கொண்டுவர முடியும். நீ, உன் அம்மா– அப்பாவிற்கு கட்டுப்பட்டவள் அல்ல. இங்கே சுற்றி நிற்கும் துப்பாக்கிகளுக்குக் கட்டுப்பட்டவள். நீ என்னோடு வர



பிடிவாதம் பிடித்தால்– அந்தத் துப்பாக்கி உன்னைப் பெற்றவர்களின் மார்புகளை குறி பார்க்கும்..." சொன்ன ஹெண்டார்ஸன்– அறைக்குள் நின்றிருந்த ஜவான்களைப் பார்த்து "ரெய்ஸ் த ஆர்ம்ஸ்" என்றான்.

அவர்கள் அனைவரும் கோரஸாய்– இந்திர துப்பாக்கிகளை உயர்த்தினார்கள்.

"எய்ம்... த... மார்க்..."

அத்தனை துப்பாக்கிகளும்– ஜோஷி, சுமித்ராவின் மார்பை குறி பார்த்தன.

ஹெண்டார்ஸன் ஏகத்தாளமாய் பிரார்த்தனாவை ஏறிட்டான். "இப்போது என்ன சொல்கிறாய் பெண்ணே! நான் 'ஷூட்' என்று சொன்னால்– உன்னைத் தவிர மற்றவர்களின் உடல்கள் ரத்தச் சல்லடைகளாக மாறிவிடும்."

பிரார்த்தனா தயக்கமாய் எழுந்தாள்.

"ம்... வா..."

வந்தாள்.

"எதற்கும் ஒருதடவை உன் அம்மாவையும், அப்பாவையும் நன்கு பார்த்துக்கொள். ஒருவேளை இந்திய அரசாங்கம் எங்களுக்கு பாதகமாக நடந்துகொண்டால்– நீ இங்கே திரும்பி வரும் வாய்ப்பிருக்காது" சொல்லிவிட்டு, ஹெண்டார்ஸன் வேகமாய் அறையைவிட்டு வெளியேற–

பிரார்த்தனாவை இரண்டு ஜவான்கள் இழுத்துப் போனார்கள். அவள் பின்னே தவிப்போடு போக முயன்ற ஜோஷியையும், சுமித்ராவையும் இந்திர துப்பாக்கிகள் மறித்து, சோபாவை நோக்கித் தள்ளின. ஜோஷி சிறிது முரண்டு பிடித்தபோது– துப்பாக்கியின் பின்புறத்தை திருப்பி– அதன் இரும்பு முனையால் 'நெக்'கென்று இடித்தான் ஒரு ஜவான். ஜோஷி விழி சொருகி வயிற்றைப் பிடித்துக்கொண்டு– முழந்தாளிட்டு மடங்கி உட்கார்ந்தார்.

# 8

புதுடெல்லி. ராணுவ அமைச்சகம்! மெல்ல விடிந்து கொண்டிருந்த வேளையில்- பயத்தைத் தருகிற பதற்றத்தோடு இயங்கிக்கொண்டிருந்தன. டெலிபிரிண்டர்கள் வேகத்தில் துடித்தன. சீருடைகளில் இருந்த அதிகாரிகள் வியர்வை முகங்களோடு- அமைச்சரின் எதிரே நின்றிருந்தார்கள். அவ சொல்லிக்கொண்டிருந்தார்.

"பாரஸ் தீவுக்கு எதிராக நாம் உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்க இயலாத நிலையில் இருக்கிறோம் தூதரகத்தைச் சேர்ந்த ஜோஷி, அவருடைய மனைவி- மகள் பிரதமர் சகோடா ஆகியோரின் உயிர்கள் புரட்சிப் படையிட அடகு வைக்கப்பட்டிருக்கின்றன. கடைசியாக வந்த தூதரக தகவல்படி- ஜோஷியின் மகள் பிரார்த்தனாவை ராணுவ முகா ஒன்றுக்குப் பணயக் கைதியாகக் கொண்டு போயிருக்கிறார்கள் பிரதமர் சகோடாவையும், தூதரகத்தைச் சேர்ந்தவர்களையும் நாம் உயிரோடு மீட்டாக வேண்டும்"

அதிகாரிகளில் ஒருவர் குறுக்கிட்டார். "எந்தவிதமான அதிரடி நடவடிக்கையும் வேண்டாமென்று சொல்கிறீர்களா ஸார்?"

"ஆமாம்..."

"நாம் அனுப்பிய போர் விமானங்களில் ஒன்பது திரும்பி வந்துவிட்டன. ஒன்றே ஒன்று மட்டும் எரிபொருள் அடைப்பு காரணமாக- தீவின் தெற்குப் பக்க கடற்கரையோரமாய் விழுந்து நொறுங்கிவிட்டது. அதன் பைலட் ஸ்க்வாட்ரன் லீடர் ஹரேஷ் பாராசூட்டில் குதித்துவிட்டதாக- அவரோடு சென்ற மற்ற மூன்று விமானங்களின் லெப்டினென்ட்கள் சொல்கிறார்கள் ஹரேஷ் ஒரு திறமையான ஸ்க்வாட்ரன் லீடர். பல போர்களில்



வீரசாகசம் காட்டியவர். அவரை இந்நேரம்- பாரஸ் தீவின் புரட்சிப் படையைச் சேர்ந்தவர்கள் கைது செய்திருக்கலாம். ஹரேஷ் அவர்கள் கையில் கிடைத்தால் நிச்சயமாய்- உயிரோடு விடமாட்டார்கள். அவர் கொல்லப்படுவதற்கு முன்- அவரையும் நாம் மீட்டாக வேண்டும்."

"அதிரடி நடவடிக்கையைத் தவிர்த்து- வேறு எந்த யோசனைகளையும் உங்களில் யார் வேண்டுமானாலும் கூறலாம்..."

அதிகாரிகள் மவுனித்தார்கள்.

"பேச்சு வார்த்தை...?"

"அது உதவாது. மேலும் ஒரு சுண்டைக்காய் தீவிடம் நாம் வலிய பேச்சுவார்த்தைக்குப் போவது- ஒரு மிகப் பெரிய கவுரவக் குறைச்சல்..."

கர்னல் ஒருவர் இரண்டடி முன்னால் வந்தார்.

"ஸார்! என் பேச்சு உங்களுக்குக் கோபத்தை வரவழைக்கலாம். இருந்தாலும் என் யோசனையை தீர்க்கமாக தெரிவிக்கிறேன். பாரஸ் தீவின் 'மார்ச்சுவரி ஹவுஸ்' என்கிற வார்த்தைக்கு நாம் பயந்து பின்வாங்குவது சரியில்லை. துணிந்து அதிரடி நடவடிக்கையில் இறங்கினால்- அந்தத் தீவை ஒரு மணி நேரத்திற்குள் நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடலாம்"

"அதிரடி நடவடிக்கை விபரீதமான யோசனை என்று ஏற்கெனவே சொல்லிவிட்டேன்"

"அது விபரீதமான யோசனைதான். ஆனால், அதை விவேகமுள்ளதாக செய்யலாம்..."

"எப்படி...?"

ராணுவ அமைச்சர் ஆர்வமாய் கேட்டுக்கொண்டிருக்கும் போதே-

டெலிபிரிண்டரில் வந்த அந்தச் செய்தியை எடுத்துக்கொள் அமைச்சரின் காரியதரிசி லால் வேக வேகமாய் வந்தார்.

"என்ன லால்...?"

"பாரஸ் தீவிலிருந்து புரட்சிப் படைத் தலைவர் ஹெண்டார்ஸ இந்தச் செய்தியை உங்களுக்கு அனுப்பியிருக்கிறார்."

அமைச்சர் வாங்கிப் பார்த்தார்.

'இந்திய அரசுக்கு- மூன்று வேண்டுகோள்கள். இந்த வேண்டுகோள்களை நீங்கள் எச்சரிக்கைகளாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

ஒன்று: பாரஸ் தீவை ஜனநாயகத்தின் உப்பு சப்பில்லாத ஆட்சி முறையிலிருந்து மீட்டு- நாங்கள் ராணுவ ஆட்சி அமைத்ததற்காக உங்கள் நாட்டுப் பிரதமரும், ஜனாதிபதியும் வாழ்த்து தெரிவிக்க வேண்டும்.

இரண்டு: பிரதமர் சகோடாவை நாங்கள் ராணுவ கோர்ட்டில் நிறுத்தி- தூக்குத்தண்டனை விதிப்போம். அதை இந்தியா கண்டுகொள்ளக்கூடாது.

மூன்று: பாரஸ் தீவில் ராணுவ ஆட்சி அமலுக்கு வந்ததையொட்டி அடுத்த வாரம் ஷார்மோஷா நகரில் தளபதி ஜெனரலாக ஹெண்டார்ஸன் பதவி ஏற்க போகிறார். அந்த விழாவுக்கு இந்திய மந்திரிசபையில் இடம் பெற்றிருக்கும் வெளிநாட்டு மந்திரியை அனுப்பி வைக்க வேண்டும்.

இந்த மூன்று வேண்டுகோள்களுக்கும் ஒப்புதல் அளித்து இன்னும் 48 மணி நேரத்தில் எங்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். தவறினால் இங்கே இருக்கும் உங்களுக்கு வேண்டிய சில முக்கியமான தலைகள்- பிண அறைகளுக்கு போய்விடுவார்கள்.'

செய்தி முடிந்து போயிருந்தது.

ராணுவ அமைச்சர்- அந்த டெலிபிரிண்டர் காகிதத்



ஆத்திரத்தோடு கசக்கி எறிந்தார். எதிரில் இருந்த அதிகாரியை ஏறிட்டார்.

"விவேகத்தோடு கூடிய அதிரடி நடவடிக்கை என்று சொன்னீர்களே? அந்த நடவடிக்கையை எப்படி எடுக்கலாம் என்பதை சொல்லுங்கள் பார்க்கலாம்."

ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறுமாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறுமாதம் | ரூ. 615 |

பணம் அனுப்ப வேண்டிய முகவரி:

மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை-600 007.

## 9

பாராசூட் தயங்கித் தயங்கி இறங்க- ஹரேஷ் அந்த இருட்டான தீவை கொஞ்சம் பயமாய் பார்த்தான்.

'கடவுளே! இந்த பாராசூட் எங்கே போய் இறங்கும்?'

கீழே என்ன காடா? வெறும் தரையா? இல்லை கடலா? –உற்றுப் பார்த்தான்.

'என்ன அசைகிறது? மரங்களின் இலைகளா? கடலின் கறுப்பான அலைகளா? கடலில் பாராசூட் இறங்கினால்- இந்தக் குளிரில் நான் விறைத்து சாகவேண்டியதுதான்!'

ஹரேஷ் கண்களை மூடிக்கொள்ள- செல்வி ஞாபகத்துக்கு வந்தாள். 'செல்வி! நான் இந்தியாவுக்கு மறுபடியும் திரும்பி வருவேனா? இந்நேரம் டெல்லி ராணுவ தலைமையகத்துக்கு தகவல் போயிருக்கும். சில விநாடிகள் அதிர்ந்து போவார்கள்.

தகவல் கிடைத்து என்ன செய்வார்கள்...? ஒரு அரை மணி நேரம் அவசர ஆலோசனை செய்வார்கள். என் சக விமான

லெப்டினெண்டுகளை கூப்பிட்டு எனது விமானத்திற்கு என்ன நேர்ந்தது என்பதை தீர்க்கமாக விசாரிப்பார்கள். பிறகு என்னை மீட்பதற்கான ஆயத்த ஏற்பாடுகளை நிதானமாக செய்ய ஆரம்பிப்பார்கள்.'

'தத்துப்ட்....'

ஒரு மரத்தின் பக்கவாட்டுக் கிளையில்- பாராசூட்டின் குடை அமைப்பு மோதி- நிலை தடுமாறி கீழே விழ- தரை பரபரப்பு நெருங்குவதை உணர்ந்து கால்களை முன்னெச்சரிக்கையாக குறுக்கிக்கொண்டான் ஹரேஷ்.

பாராசூட் தரை தட்டியது.

ஹரேஷின் குதிகால் நரம்புகளில் மின்சாரம் பாய்ந்தது. சிறிது நேரம் அப்படியே நின்றான். பின் பாராசூட்டிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தான். அது ஒரு காட்டுப்பகுதி என்று மூளைக்கு உரைத்தது.

சில் வண்டுகள் 'பிர்ர்ர்ர்... பிர்ர்ர்ர்...' என்று இரைய- ஹரேஷ் தன் மணிக்கட்டிலிருந்த ரேடியம் கடிகாரத்தைப் பார்த்தான்.

மணி 3.20

இன்னும் சிறிது நேரத்தில் விடிந்துவிடும்.

விடிவதற்குள்- ஒரு மறைவான இடத்தைக் கண்டுபிடித்து அங்கே பதுங்கிக்கொள்ள வேண்டும். புரட்சிப்படை வீரர்களின் கையில் மட்டும் சிக்கிக்கொள்ளவே கூடாது. சிக்கினால்...

ஹரேஷ் யோசித்துக்கொண்டே மெதுவாய் நடந்தான். பூட்ஸ் அணிந்த கால்களுக்கு கீழே- இலைச் சருகுகள் சத்தமாய் மிதிபட்டன. சில நூறு கெஜ தூரம் போவதற்குள் இருட்டு கண்களுக்கு சிநேகமாக நட்சத்திர வெளிச்சத்தில் காட்டின் அடர்த்தி தெரிந்தது. பெரிய பெரிய மரங்களுக்கு நடுவே- பாதையொன்று கோணலாய் போயிற்று.

'இந்த வழி எங்கே போகிறது?'



தயக்கமாய் யோசித்து யோசித்து நடந்தான்.

நீளமாய் அரை மணி நேரம் நடந்ததும்- அந்தச் சத்தம் கேட்டது.

நின்று உற்று கவனித்தான்.

ஏதோ ஒரு வாகனம் இரையும் சத்தம். அவனுக்கு நேர் பின்னால் மரங்களுக்கு மத்தியில் கேட்டது. ஹரேஷ் சத்தம் வந்த பக்கம் வேகமாய் ஓடி- ஒரு மரத்தின் மேல் தாவி ஏறினான். பாதி மரத்தை தொட்டுக்கொண்டிருக்கும்போதே- மெலிதான இருட்டில் அந்தக் காட்சி கண்ணுக்கு கிடைத்தது.

சமவெளி போன்ற அந்த இடத்தில் ஒரு ராணுவ டிரக் நின்றிருக்க- ஜவான்கள் துப்பாக்கியோடு தெரிந்தார்கள். டிரக்கின் பின்பக்கக் கதவு திறக்கப்பட்டிருந்தது. அந்த வழியாக இறங்கிக்கொண்டிருந்த ஒவ்வொரு நபரையும்- துப்பாக்கியின் பின்பக்கத்தில்- இடித்து தள்ளிக்கொண்டிருந்தார்கள் சில ஜவான்கள். ஒரு மரத்தின் கிளையோடு கிளையாய் ஒட்டிக்கொண்டு- என்னதான் நடக்கப்போகிறது என்பதை ஆவலோடும், ஒருவகை பயத்தோடும் இவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

## 10

டிரக்கின் பின்பக்கத்திலிருந்து ஒவ்வொருவராய் இறங்கிக்கொண்டிருக்க- கொஞ்சம் தள்ளி நின்று சுருட்டை புகைத்துக்கொண்டிருந்த ஜெனரல் டார்ஸன் சிரித்தான்.

"வருக..! வருக... எம்.பி.க்களே! நீங்கள் நிரந்தரமாய் உறங்கப் போகிற இடம் இதுதான். இந்தப் பாரான தீவின் பாதி ஜனநாயகத்தை இங்கேதான் குழிதோண்டி புதைக்கப் போகிறோம்... புதைப்பது மட்டும் நாங்கள். உங்களுக்கான குழிகளைத் தோண்டிக் கொள்வது நீங்கள்தான்...! பூர்வாஸ்!"

"ஸார்..."

இரண்டு கைகளிலும் இயந்திர துப்பாக்கி ஏந்திய ஒரு சீருடை பக்கத்தில் வந்தான்.

"ஆளுக்கொரு மண்வெட்டியை கையில் கொடு... முப்பத்தெட்டு எம்.பி.களும் குழிகளைத் தோண்ட ஆரம்பிக்கட்டும். குழிகளைத் தோண்ட மறுப்பவர்கள் மீது பெட்ரோலை ஊற்றி கொளுத்திவிடு."

அவன் 'சல்யூட்' பதித்துவிட்டு- எம்.பி.களை நோக்கிப் போனான். எல்லோருமே கிழிந்த ஆடைகளில் இருந்தார்கள். துப்பாக்கி 'பயனைட்' கத்தியால் சிலரின் உடல்கள்- ரத்தக் கோடுகளாய் கீறப்பட்டிருந்தது. சிலருடைய நாசித் துவாரங்களில்- ரத்தம் கறுப்பாய் உறைந்து போயிருந்தது. நான்கடி இடைவெளிவிட்டு தள்ளித் தள்ளி நிறுத்தப் பட்டிருந்தவர்களின் கைகளில் மண்வெட்டிகள் திணிக்கப் பட்டன.

"உங்கள் உயரத்திற்கும், உடம்புக்கும் ஏற்றமாதிரி- ஆழமாகவும், அகலமாகவும் குழிகளை வெட்டிக்கொள்ளுங்கள்."

எல்லோரும் மவுனமாய் நின்றார்கள்.

"ம்... சீக்கிரம்...! ஒரு விநாடிகூட நிமிராமல் குனிந்து கொண்டே குழிகளைத் தோண்ட வேண்டும். யாராவது நிமிர்ந்தால் நிமிர்கிறவர்களின் முதுகில் பயனைட் கத்தி- ரத்தமாய்க் கோடு கிழிக்கும்."

எல்லோரும் மண்வெட்டிகளோடு குனிந்தார்கள். 'சக்... சக்...' என்று சத்தங்களோடு கொத்த ஆரம்பித்தார்கள். ஹெண்டார்ஸன் கையில் புகையும் சுருட்டோடு- அவர்களுக்குப் பின்னால் மெல்ல நடந்துபோனான்.

"பேனா பிடித்து வெள்ளைத்தாள்களில் கையெழுத்து போட்ட கைகள் இன்றைக்கு மண்வெட்டிகளைப் பிடித்திருக்கின்றன. ம்... தோண்டுங்கள்."



ஒரு நிமிடம் தோண்டுவதற்குள் சிலபேர்களுக்கு மூச்சிரைப்பு ஏற்பட்டது. நிமிர முயன்றவர்களின் முதுகுகள்- பயனைட் கத்திகளால் 'புளிச் புளிச்' என்று ரத்தம் வருமாறு கீறப்பட்டன... ஹெண்டார்ஸன் தன் பங்குக்கு- கையிலிருந்த சுருட்டின் நெருப்பு வாயை ஒரு எம்.பி.யின் பிடரியில் தேய்த்து அணைத்தான்.

"சீக்கிரம்... சீக்கிரம்..."

ஜவான்கள் விரட்டினார்கள். பெரிது பெரிதாய் வியர்த்துக் கொண்டு- மூச்சிரைத்தபடி- விதவிதமான சத்தங்களோடு எம்.பி.கள் தோண்டிக்கொண்டிருக்க- ஹெண்டார்ஸன் தன் வேனை நோக்கிப் போனான். வேனின் பின்பக்கக் கதவின் இரண்டு பக்கமும் காவலுக்கு நின்றிருந்த ஜவான்கள் அட்டென்ஷனுக்கு வந்தார்கள்.

"வேன் கதவைத் திற..."

திறந்தார்கள்.

உள்ளே மருண்ட பார்வையோடு பிரார்த்தனா.

"வெளியே வா..."

அவள் தயக்கமாய் வெளிப்பட்டாள். ஹெண்டார்ஸன் அவளை நெருங்கி தோளைத் தொட்டான். "இந்தக் கவலையிலும் நீ அழகாக இருக்கிறாய்..."

பிரார்த்தனா அவன் கையைத் தட்டிவிட்டாள். கொஞ்சம் விலகி நின்று சுற்றும் முற்றும் பார்த்தாள்.

"என்ன பெண்ணே! அப்படி பார்க்கிறாய்...? முப்பத்தெட்டு எம்.பி.களை இந்த வார்ஷா சமவெளியில்தான் விதைக்கப் போகிறேன். ஆறு மாதம் கழித்து இந்த இடத்தை நன்றாக உழுது- கோதுமை பயிர் செய்து, ஜனநாயக சப்பாத்தியை மாட்டுக்கறியோடு சேர்த்துச் சாப்பிடப் போகிறேன்."

பிரார்த்தனா அவனை பயமாய் பார்த்தாள். 'இந்த மூர்க்கனுக்கு நிஜமாகவே இதயம் என்பது இருக்காதோ...?'

"என்ன பெண்ணே... உன் பார்வையில் விஷம்...?"

"இ..இவர்களையெல்லாம் நீ கொல்லத்தான் வேண்டுமா?"

"எங்கள் ராணுவ ஆட்சியில் இந்த ஜனநாயகக் களைகள் இருக்க வேண்டாமே?"

"உன் காட்டுமிராண்டி செயலை உலக நாடுகள் கண்டிக்கும்."

"கண்டிக்கும் நாடுகளைப் பற்றி எனக்குக் கவலையில்லை. இரண்டு வல்லரசுகளில் ஒரு வல்லரசு எங்கள் பக்கம் இருக்கிறது. உன்னுடைய நாடான இந்தியாவும் எங்கள் ராணுவ ஆட்சிக்கு வாழ்த்து தெரிவிக்கப்போகிறது"

"அந்த முட்டாள்தனத்தை இந்தியா செய்யாது..." –பிரார்த்தனா ஆவேசமாய் சொல்லிக்கொண்டிருக்கும்போது, வேனுக்குள் இருந்த 'வயர்லெஸ்' கரகரத்தது.

ஹெண்டார்ஸன் முன்பக்கக் கதவுக்குப் போய் மைக்ரோ போனையும், ரிஸீவரையும் எடுத்துத் தொடர்புகொண்டான்.

"கர்னல்... பெர்ஷிஷ் பேசுகிறேன்."

"சொல்லுங்கள்..."

"இந்திய போர் விமானங்களை விரட்டிவிட்டோம்..."

"குட்... ஜாப்"

"ஆன்டி ஏர்கிராப்ட் பீரங்கிகளை இயக்கி சுட்டதில் ஒரு விமானம் வீழ்ந்துவிட்டது."

"சந்தோஷமான செய்தி."

"ஆனால், அந்த விமானி தப்பிவிட்டான்."

"எப்படி?"

"பாராசூட் மூலம்"

"தீவின் எந்தப் பக்கம் இறங்கினான்?"

"தெற்கு கரைப்பக்கம்"



"தேடுவதற்கு முயற்சிகளை எடுத்துக்கொண்டீர்களா...?"

"ஒரு 'குரூப்' தீவிரமாய் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது"

"கிடைத்துவிடுவான். அவன் பிடிபட்டால் உடனே கொன்றுவிடாதீர்கள். அவனை இரண்டு நாட்கள் வைத்திருந்து- இந்தியாவின் ராணுவ விஷயங்களைக் கறந்துவிட்டு- பிறகு கொன்றுவிடலாம்..."

"ரோஜர்ர்..."

'வயர்லெஸ்' அணைக்கப்பட்டது.

ஹெண்டார்ஸன் மைக்ரோபோனையும், மைக்ரோ ரிசீவரையும் அதனதன் இடங்களில் பொருத்திவிட்டு திரும்பினான்.

பூர்வாஸ் நின்றிருந்தான்.

"என்ன...?"

"குழிகள் தோண்டப்பட்டுவிட்டன"

"முப்பத்தெட்டு குழிகளுமா...?"

"ஆமாம்..."

"ஆழமாய்...? அகலமாய்...?"

"ஆமாம்..."

ஹெண்டார்ஸன் பக்கத்தில் நின்றிருந்த பிரார்த்தனாவின் தோள்பட்டையைப் பிடித்துக்கொண்டு- அவளை இழுத்தபடி நடந்துகொண்டே சொன்னான்.

"வா...! ஜனநாயகத்தின் பாதுகாவலர்கள் எப்படி ரத்தம் சிந்துகிறார்கள் என்று பார்ப்போம்..."

"நா...நான்... மாட்டேன்..." பிரார்த்தனா அவனை உதற- ஹெண்டார்ஸன் நின்று சிரித்தான்.

அதன் பயங்கரத்தை உணர்ந்த பிரார்த்தனா வெளிறிப்போன முகத்தோடு அவனைத் தொடர்ந்தாள்.





அந்த முப்பத்தெட்டு குழிகளும் இருட்டில் வாய் பிளந்து தெரிய– இரண்டு வரிசைகளில் எம்.பி.கள் மண் ஒட்டிய உடம்போடு நின்றிருந்தார்கள்.

ஹெண்டார்ஸன் அவர்களுக்கு முன்பாய் போய் நின்றான்.

"இந்தத் தீவின் எம்.பி.களுக்கு என் கடைசி வந்தனம். ஜனநாயக ஆட்சியை எதிர்த்து நான் குரல் கொடுத்தபோதெல்லாம் பிரதமர் சகோடாவின் அரசு என்னையும், என் இயக்கத்தையும் நசுக்கப் பார்த்தது. ஆனால் முடியவில்லை. இன்றைக்கு நாங்கள் உங்களை ஜெயித்துக் காட்டியிருக்கிறோம். நாங்கள் புரட்சி செய்த காலத்தில் உங்கள் அரசு– எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பேர்களை சுட்டுத் தள்ளியிருக்கிறது. அதற்கு எதிராக பதிலடி நடவடிக்கைதான் இது. மொத்தம் இருக்கிற எழுபத்தேழு எம்.பி.களில் பாதி பேரை மட்டும் துப்பாக்கித் தோட்டாக்களுக்கு தீனாக கொடுக்கப் போகிறோம். குட்பை டு எவரிபடி... வரிசையில ஒழுங்காய் நின்று ஆறு ஆறு பேர்களாய்– சாகவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்."

ஹெண்டார்ஸன் பேச்சை முடித்துவிட்டு ஜவான்களுக்கு கண்ணைக் காட்ட– அவர்கள் உறுப்பினர்களில் ஆறு பேரை– துப்பாக்கிமுனைகளில் தள்ளிக்கொண்டு போனார்கள்.

இருபதடி தொலைவில் நிற்க வைத்தார்கள்.

எந்திரத் துப்பாக்கிகள் ஏந்திய ஆறு ஜவான்கள் அவர்களை வசதியாய் குறி பார்க்க–

ஹெண்டார்ஸன் "ஷூட்... தட் பெக்கர்ஸ்" என்று கத்தினான்.

ஆறு துப்பாக்கிகளும் ஒரே மாதிரி சிரிக்க–

ஆறு தோட்டக்களை உடம்பின் சகலபாகங்களிலும் வாங்கிக் கொண்ட எம்.பி.கள்– விதவிதமாய் கீழே சரிந்தார்கள்.

"அடுத்த ஆறு பேர்..."

ஹெண்டார்ஸன் சொல்லிவிட்டு, புதிதாய் சுருட்டு ஒன்றை பற்ற வைத்துக்கொண்டான்.

## 11

புதுடெல்லியின் ராணுவ அமைச்சகம். இன்னும் விடியாத காலை வேளை.

அதே கவலையான அதிகாரிகள். ராணுவ அமைச்சர அந்த ஒரே ராத்திரியில் அதிக வயதானவர் போல் தோற்றம் காட்டினார்.

விவேகமான அதிரடி நடவடிக்கை எடுப்பது பற்றி அமைச்சருக்கு அந்த அதிகாரி விளக்கிக்கொண்டிருந்தார். "ஹூகாஸ் முறையை உபயோகப்படுத்தி- கண் இமைக்கிற நேரத்திற்குள் ராணுவ காரிஸான்களையும், துறைமுக சாதனங்களையும் நொறுக்க வேண்டும். போர் விமானங்களின் தாக்குதல் மும்முரமாய் நடந்துகொண்டிருக்கும்போதே பாராசூட் படைவீரர்கள்- மற்ற விமானங்களிலிருந்து நூற்றுக்கணக்கில் கீழே இறங்க வேண்டும். இந்தத் தாக்குதல்கள் பகல் நேரத்தில் சாத்தியமில்லை. நாளை நடுஇரவுக்கு மேல்தான் சாத்தியம். அதுவரைக்கும்..."

"அதுவரைக்கும்...?"

"பாரஸ் தீவின் புரட்சிப்படை தளபதி ஹெண்டார்ஸனின் கோரிக்கைகளுக்கு இணங்குவதுபோல்- நம் அரசு நடிக்க வேண்டும். நீங்களோ, பிரதமரோ... ஹெண்டார்ஸனோடு- டெலிபோனிலோ... வயர்லெஸ்ஸிலோ தொடர்புகொண்டு- ராணுவ தாக்குதல் எதுவும் இருக்காது என்று கூறி வைக்க வேண்டும். இதன் காரணமாய் அங்கே எச்சரிக்கை உணர்வுகள் இல்லாமல் போய் ஒரு அலட்சிய சூழ்நிலை நிலவும். அந்த சூழ்நிலையைத்தான் நாம் நமது அதிரடி நடவடிக்கைக்கு



பயன்படுத்திக்கொள்ளப் போகிறோம்..."

அமைச்சர் தான் அணிந்திருந்த மூக்குக் கண்ணாடியைக் கழற்றி கையில் வைத்துக்கொண்டு யோசித்தார். அறையில் சில நிமிடங்கள் மவுனமாய் ஓடியபின் விமானப்படை தளபதியை ஏறிட்டார்.

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்... மிஸ்டர் ராய்?"

ராய் தன் ரோஜா நிற உப்பலான கன்னங்களை இரண்டு கைகளாலும் வருடிக்கொண்டே சொன்னார். "நல்ல யோசனைதான். ஹூகாஸ் அதிரடி நடவடிக்கையில் இரண்டொரு பாதகமான விஷயங்கள் உண்டு. போர் விமானங்கள் வெகு தாழ்வாக பறப்பதால் ஆன்டி ஏர்கிராப்ட் பீரங்கிகளுக்கு அவைகள் தப்ப வேண்டும். பீரங்கிகளின் ஷெல்கள் விமானங்களின் மேல் பட்டால் நம் முயற்சிகள் வீணாகிவிடும்"

"ஹூகாஸ் பறப்பில் திறமையான பிளைட் லெப்டினென்டுகள், ஸ்க்வாட்ரன் லீடர்கள் இருக்கும்போது- நாம் அந்த ஆன்டி ஏர்கிராப்ட் பீரங்கிகளைப் பற்றி கவலைகொள்ள வேண்டியதே இல்லை..." -விமானப்படையின் உதவி தளபதி சொன்னார்.

"சரி... யார் யாரை அனுப்பலாம்...?"

பட்டியல் போட ஆரம்பித்தார்கள்.

## 12

மரக்கிளையில் ஒட்டிக்கொண்டு- இருட்டில் கரைந்தபடி நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்த ஹரேஷ் உறைந்துபோனான்.

மிக மோசமான படுகொலைகள்!

முப்பத்தெட்டு எம்.பி.களும்- பதினைந்தே நிமிடத்தில்

முடிந்து போனார்கள். உடம்புகளை இழுத்து குழிக்குள் போட் மண்ணைத் தள்ளி வேகமாய் மூடினார்கள். ஹெண்டார்ஸ சுருட்டுப் புகையோடு சிரித்துக்கொண்டிருந்தான்.

"பார்த்தாயா பெண்ணே! எங்களை எதிர்ப்பவர்கள் எப்படி மண்ணுக்குள் புதையுண்டு போகிறார்கள்?"

பிரார்த்தனா ஒன்றும் பேசாமல் கண்களில் நீர் மின்ன எங்கோ பார்த்தாள். அவன் அவளுடைய தோளைத் தட்டினான்.

"ஏ...ஏய்... உன்னைத்தான்..."

அவள் திரும்பினாள்.

'எ...என்ன?' என்பது போல் பார்த்தாள்.

"உனக்கு நடனமாடத் தெரியுமா...?"

"தெ...தெரியாது..."

"பொய்... சொல்லாதே! நடனமாடும் உடையில் ஒரு 'போட்டோ'வில் நீ இருப்பதை உன் வீட்டில் பார்த்தேன்."

அவள் திக்கென்று விழித்து நிற்க– அவன் பலமாக சிரித்துவிட்டு சொன்னான். "என் கண்களிலிருந்து எதுவுமே.. யாருமே தப்ப முடியாது. இப்போது உண்மையைச் சொல்; உனக்கு நடனமாடத் தெரியுமா?"

"தெ...தெரியும்..."

"குட்! இந்த முப்பத்தெட்டு கல்லறைகளின் மேல் நீ அரை மணி நேரமாவது நடனம் ஆடவேண்டும்."

"நோ..."

"இன்னொரு தடவை 'நோ' என்றால் உன்னைச் சுடவேண்டும் என்கிற கட்டளையை பிறப்பித்துவிடுவேன்."

மரக்கிளையோடு ஒட்டிக்கொண்டிருந்த ஹரேஷின் உடம்பு கோபத்திலும், ஆத்திரத்திலும் துள்ள–

கிளை அசைந்தது.



ஹெண்டார்ஸனின் கண்கள் சரேலென்று– அந்த மரக் கிளைக்குப் போயிற்று. அவனது பார்வை கூர்மையாயிற்று.

## 13

**வி**மானப் படைத் தளபதி நிதானமாக ராணுவ அமைச்சரிடம் சொல்லிக்கொண்டிருந்தார். "மொத்தம் மூன்று ஸ்க்வாட்ரன் லீடர்கள், ஆறு விமான லெப்டினெண்டுகள், எல்லாமே அதிவேக ஜீகுவார்கள். பைட்டர் விமானிகளும், பாம்பர் விமானிகளும் இலக்குகளை குறிவைத்து தாக்கிக்கொண்டிருக்கும்போதே– வேறு விமானங்களில் மூன்று டிட்டாச்மெண்ட் இந்திய ஜவான்கள் பயணித்து– பாராசூட்களில் இறங்க வேண்டும். எல்லோர் கைகளிலும் 'ஸெல்ப் லோடிங்' துப்பாக்கிகள் இருப்பது அதி முக்கியம். இந்த மூன்று டிட்டாச்மெண்ட்களும் மூன்று பிரிவாக பிரிந்து– ராணுவ காரிஸான்களை கைப்பற்ற வேண்டும். தொடர்ந்து நாம் தாக்குதலை நடத்த டாங்கிகளும், ஆன்டி ஏர்கிராப்ட் பீரங்கிகளும் வேண்டும்..."

"நமது டிட்டாச்மெண்டுகளை சேர்ந்த ஜவான்கள், புரட்சிப்படையின் ராணுவ காரிஸான்களை கைப்பற்ற முடியுமா?"

"முடியும்."

"எனக்கு நம்பிக்கை ஏற்பட மறுக்கிறது."

தளபதி புன்னகைத்தார். "பாரஸ் தீவு ஒன்றும் பெரிய தேசமில்லை. சிறு தீவு. ராணுவ பலம் இல்லாத தீவு. இந்திய தூதரக குடும்பமும், பிரதமர் சகோடாவும் ஆபத்தில் சிக்காமல் இருந்திருந்தால்... இந்நேரம் புரட்சிப் படையை நசுக்கியிருக்கலாம்."

"ஆனா, என்ன நடந்தாலும்... அவர்கள் காப்பாற்றப்பட வேண்டும். அவர்களை நாம் இழந்தால்- தாக்குதல் நடத்தியும் பயனில்லை."

"நமது ராணுவம் அவர்களைக் காப்பாற்றும்."

தளபதி சொல்லிக்கொண்டு இருக்கும்போதே அமைச்சரின் செயலாளர் உள்ளே வந்தார்.

"ஸார்! பாரஸ் தீவிலிருந்து 'வயர்லெஸ்' செய்தி."

"என்ன...!"

"நம்முடைய ஸ்க்வாட்ரன் லீடர் ஹரேஷை புரட்சிப்படை கைது செய்திருக்கிறது. நாம் ஏதாவது ராணுவ நடவடிக்கை எடுத்தால்- அந்த விநாடியே ஹரேஷ் கொல்லப்படுவாராம். இன்னும் நாற்பத்தெட்டு மணி நேரத்தில் ஹெலன்டாரின் எழுப்பியுள்ள கோரிக்கைகளுக்கு இந்தியா சம்மதம் தெரிவிக்க வேண்டுமாம். இல்லாவிட்டால் கெடு நேரம் முடிந்ததும்- இந்தியத் தூதரின் மகள் பிரார்த்தனா, ஹார்மோஷா நகரத்தின் முக்கியமான சதுக்கம் ஒன்றில் வைத்து- ராணுவ வீரர்களால் தண்டிக்கப்படுவாளாம்."

லால் சொல்ல சொல்ல-

கேட்டுக்கொண்டிருந்த அமைச்சரும், மற்ற அதிகாரிகளும் கொதித்துப் போனார்கள். எல்லோரின் முகங்களிலும் கோபம். ரத்தம் வேகமாய் பாய்ந்து கண்களை சிவக்க வைத்தது.

## 14

புரட்சிப் படையைச் சேர்ந்த சிப்பாய்கள்- துப்பாக்கிகளோடு அறை வட்டமாய் சூழ்ந்து நிற்க- ஹரேஷ் நடுவில் நின்றிருந்தான். 'சே... மாட்டிக்கொண்டோமே!' என்கிற கவலை அவனுடைய கண்களில் தெரிந்தாலும்- பிரார்த்தனாவை அந்த இக்கட்டான





"என்ன... கதாநாயகி காய்கறி இலையால் செஞ்ச துணியைப் போட்டுட்டு வர்றாங்க?"

"படத்துல இலை மறைவு காய் மறைவா கவர்ச்சி காட்ட சொன்னீங்களே!"

"தலைவர் ஏன் உன்னை கட்சியைவிட்டு நீக்கினார்?"

"தலைவரோட சின்ன வீட்டை வாடகைக்கு விட முடியுமான்னு கேட்டுத் தொலைச்சுட்டேன்."





"எந்த நிறத்தைக் கண்டால் மாடு ரொம்ப மிரளுமோ அந்த நிறத்தில் ஒரு குடை கொடுங்க!"

"ஏன் அப்படி கேட்கிறீங்க?"

"குடை எங்க மாமியாருக்கு வாங்கறேன்!"

- வந்தை ஜி.கே. நிதி.

# இதயம் பேசுகிறது!

## இரட்டைக்குழல் துப்பாக்கி!

இரட்டை நாவல் பொங்கலும், கரும்புமாய் இத்தித்தது. சிறுகதையும் அருமை.

**அரியலூர் எஸ். பாரிமுத்து**

ஆர்.சுமதியின் "உருகுதே மனம்" நாவல் உண்மையிலே உள்ளத்தை உருக்கிவிட்டது. தெக்கூர் அனிதாவின் "திகில் ஒத்திகை" மிகப் பரபரப்பாக பக்கங்களை புரட்டச் செய்து விட்டது.

**கே. சரவணன், சின்னமனூர்.**

இரட்டை நாவல் 'சூப்பர்!' புத்தாண்டை 'ராணிமுத்து'டன் கொண்டாடினோம்.

**ஆனந்தராஜ், சாஸ்திரிநகர்.**

"உருகுதே மனம்" மனதை உருகவைத்து- புத்தாண்டில் புது 'டானிக்' கொடுத்துவிட்டது. அதில் குடும்ப சத்துகள் நிறைய!

**தூத்துக்குடி வீரமுடி**

இரட்டை நாவல் இனித்தது.

**ம. வசந்தா, கச்சிராயபாளையம்.**

இரட்டை நாவல் இரட்டிப்பு சுவை தந்து அசத்திவிட்டது.

**பாலா சங்குபிள்ளை, திருச்சி.**

"இரட்டைக்குழல் துப்பாக்கி போன்று இரட்டை நாவலும் பாராட்டும்படி இருந்தது.

**என்.எஸ். பிச்சைமுத்து, சிங்கப்பெருமாள்கோவில்.**

மனதை சாகடிக்கும் வினைவுகளால் எத்தனை நல்லவர்கள் வாழ்க்கையை தவறவிடுகிறார்கள் என்பதற்கு சுமதியின் நாவல் ஒரு சாட்சி.

**ராதா நாராயணசாமி, சேலக்கரை.**

'திகில் ஒத்திகை' நாவல் அடுத்து என்ன நடக்கும் என்று அறிய முடியாதபடி கடைசி வரை பரபரப்பாக சென்றது.

**ஆர்.பி. ஜெயச்சந்திரன், பூனாம்பாளையம்.**

இரண்டு அமர்க்களமான நாவல்களைத் தந்து அசத்திவிட்டீர்கள்.

**சு.மு. சுரேஷ், தகட்டூர்.**

அட்டையில்:
நடிகை **மீரா ஜாஸ்மின்**

நாவலைப் படித்துவிட்டு, உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். முகவரி: **இதயம் பேசுகிறது, "ராணி முத்து", சென்னை-600 007.**



நிர்ப்பந்தத்தில் இருந்து விடுவித்தது குறித்து ஆனந்தப்பட்டான். ஹெண்டார்ஸனின் கவனம் இப்போது முழுக்க முழுக்க ஹரேஷின் மேல் விழுந்திருந்தது. ஒரு குரோதமான பார்வையோடு துப்பாக்கி 'பயனெட்'டால் மோவாயை நிமிர்த்திவிட்டு கேட்டான்.

"உன் பெயரென்ன...?"

"ஹரேஷ்..."

"ஜ்மே. விழுந்த விமானத்திலிருந்து தப்பியது நீதானே?"

"ஆமாம்"

"என்ன ரேங்க்? பிளைட் லெப்டினென்டா?"

"நோ... ஸ்க்வாட்ரன் லீடர்..."

"நான் ஜெனரல்... ஹெண்டார்ஸன்..."

'அப்படியா?' என்பதுபோல் அலட்சியமாய் பார்த்தான் ஹரேஷ்.

"என்ன பார்க்கிறாய்? உன் தொப்பியைக் கழற்று. எனக்கு வணக்கம் சொல்..."

ஹரேஷ் சிரித்தான்.

"நான் என் மேலதிகாரிகளுக்கு மட்டுமே மரியாதை கொடுத்துப் பழக்கம். உன்னைப் போன்ற ஒரு அதிரடி கும்பலின் தலைவனுக்கு என் தலை வணங்காது."

ஹெண்டார்ஸன் தன் வலுவான கையை 'ர்ர்ரப்'பென்று வீசி, ஹரேஷின் முகத்தை நொறுக்கினான். மூக்கிலும், வாயிலும் ரத்தம் கொட்டி சீருடையை நனைத்தது. ஹரேஷ் ரத்தம் வழியும் வாயோடு சிரித்தான்.

"சிரிக்காதே மேன்..."

ஹரேஷ் தொடர்ந்து சிரிக்க...

ஹெண்டார்ஸன் மறுபடியும் கோபமாகி- இடது கையை வீச,

ஹரேஷ் அந்தக் கையை பற்றி நிறுத்தினான். சொன்னான்:

"ஒரு இந்திய ராணுவ வீரன் அடிபட்டால் சிரிப்பா அழமாட்டான். சர்வதேச போர் விதிகளின்படி ஒரு போர்க் கை எப்படி நடத்தப்பட வேண்டும் என்பது உனக்குத் தெரியுமா?"

"தெரியும்..."

"எப்படி?"

"இப்படி..." -சொன்ன ஹெண்டார்ஸன் தன் பூட்ஸ் காலை உயர்த்தி- ஹரேஷின் அடிவயிற்றில் கூர்க்கமாய் உதைத்தான்.

"ஹப்ப..."

ஹரேஷ் மயங்கி மல்லார்ந்தான். அடிவயிற்றில் பிரளய வலி, உடம்பின் ஒவ்வொரு நரம்பிலும் தீப்பற்றிக்கொண்ட மாதிரி உணர்ச்சி.

"இவனை நிற்க வையுங்கள்."

இரண்டு சிப்பாய்கள்- மல்லார்ந்து விழுந்தவனை உயர்த்தினார்கள். ஹரேஷ் வலியால் துடித்துப்போய் கண்கள் சொருகினான்.

"ஒரு இந்திய ராணுவ வீரன் அடிபட்டால் சிரிப்பானா? எங்கே சிரி பார்க்கலாம்...! பூர்வாஸ்..."

"ஸார்..."

"கிவ் மீ ஏ ரைபிள்! இவன் எத்தனை நேரத்துக்குத்தான் சிரிப்பான் என்று பார்க்கலாம்..."

பூர்வாஸ் கனமான துப்பாக்கி ஒன்றை கொண்டுவந்து கொடுக்க- ஹெண்டார்ஸன் அதை பின்பக்கமாய் திருப்பிக் கொண்டு- ஹரேஷை நெருங்கினான். "உன் வயிற்றை இரண்டு தடவை இதால் இடித்தால் என்னாகும் தெரியுமா? சிறுநீரகங்கள் சிதறிவிடும். சிறுநீரகங்கள் சிதறினாலும் நீ சிரிப்பாயா?"

"முட்டாளே! ஒரு போர்க் கைதியை இப்படி இம்சிக்கக்



கூடாது. சர்வதேச போர் விதிகளின்படி ஒரு போர்க் கைதி பிடிபட்டால் அவனுக்கு உணவு தரவேண்டும். உணவு இல்லாவிட்டால் ஒரு கோப்பை தேநீராவது தரவேண்டும்."

"அது சர்வதேச போர் விதி! என்னுடைய போர் விதி இது..." துப்பாக்கியின் கனமான பின் பக்கத்தை- இட்டத்தட்ட நூறு மைல் வேகத்தில் ஹரேஷின் வயிற்றில் மோதினான்.

ஹரேஷ் வீறிட்டு- முன்பக்கமாய் மடங்கி- கடைவாயின் இரண்டு பக்கங்களிலும் பொலபொலவென்று ரத்தம் கொட்டினான்.

"எங்கே... சிரி பார்ப்போம்..."

ஹரேஷ் சிரிக்க முயன்று- முடியாமல் அவசர மயக்கத்துக்கு போனான்.

"பூர்வாஸ்..."

"ஸார்..."

"இவனுக்கு போர் அனுபவம் அதிகம். துணிச்சல் பேர்வழி. இந்திய ராணுவ ரகசியங்கள் இவனிடம் புதைந்திருக்கலாம். ராணுவ பாரக்ஸில் அடைத்து வைத்து நாளை விசாரிப்போம்" சொல்லிக்கொண்டே திரும்பியவன்-

முகம் மாறினான். பிரார்த்தனா நின்றிருந்த இடம் காலியாய் இருந்தது.

கத்தினான்.

"பூர்வாஸ்."

"ஸார்!"

"அந்தப் பெண் பிரார்த்தனா எங்கே?"

"இ...இ...இங்கே... உங்களுக்குப் பின்னால்தான் நின்றிருந்தாள்..."

"முட்டாள்களே! ஹரேஷை நான் அடித்துக்கொண்டிருந்த போது அவள் எப்படியோ நழுவி தப்பிவிட்டாள்... போய்த்

தேடுங்கள். அவன் வெகுதூரம் போயிருக்க முடியாது."

சிப்பாய்கள் நான்கு திசைகளுக்கும் பிரிந்து- பூட்ஸ் சத்தங்களோடு ஓடினார்கள்.

## 15

விடிந்துகொண்டிருந்த அந்த நேரத்தில்- ராணுவ அமைச்சரின் முன்னிலையில்- அதிகாரிகள் அனைவரும் நேர் பார்வை பார்த்துக்கொண்டிருக்க- விமானப் படைத் தளபதி- அந்த ரகசிய அறிக்கையைப் படித்துக்கொண்டிருந்தார்.

"மொத்தம் மூன்று ஏற்பாடுகள். அவை நாளை இரவு பதினொரு மணிக்கு புறப்பட்டுப் போகின்றன. ஸ்க்வாட்ரன் லீடர்கள் சுக்தேவ், ஹர்விந்தர், லால்ஜி ஆகியோர் இந்த பார்மேஷன்களை தலைமை தாங்கிச் செல்வார்கள். ஒரு விமானம் பாம்பராகவும், மற்ற இரண்டும் பைட்டராகவும் ஒவ்வொரு பார்மேஷனிலும் செயல்படும். கண்மூடித்தனமான தாக்குதல் வேண்டாம். பாரஸ் தீவின் வரை படத்தில் குத்தப்பட்ட சிவப்பு குண்டூசி பகுதிகளை தாக்க வேண்டாம். அவை மக்கள் வாழுமிடம். தீவின் ராணுவப் படையில் இருக்கும் பாதிக்கு மேற்பட்ட அர்டிலரி யூனிட்கள் புரட்சிப் படையோடு சேர்ந்துவிட்டதாக நமக்குத் தகவல்.

எனவே, அந்த ஆர்ட்டிலரி யூனிட்கள் நம் தாக்குதலை முறியடிக்க முயற்சி செய்யலாம்... நம்முடைய விமான தாக்குதல் நடந்துகொண்டிருக்கும்போதே- வேறு விமானங்கள் மூலம் மூன்று டிட்டாச்மென்ட்டைச் சேர்ந்த இந்திய ஜவான்கள் பாராசூட் உதவியோடு தீவில் இறங்குவார்கள். இவர்கள் உடனடியாக சில ராணுவ காரியங்களை கைப்பற்ற வேண்டியது மிகவும் முக்கியமான ஒன்று. ஒரு டாங்கி யூனிட்டையும், மிஸைல் ஆப்பரேட்டர்களையும் கைப்பற்றினால்- எதிரிகளை சுலபமாய் துவம்சம் செய்துவிடலாம். அந்தத் தீவில் நமக்கு ஒரே பாதகம்-



'கண்ணி வெடி'கள்தான். அவை தீவு முழுக்க புதைந்து கிடக்கும். கால் வைத்தால் வெடிக்கும். அவைகளை தவிர்த்து ராணுவ காரிஸான்களை நோக்கி முன்னேற வேண்டும். இரண்டு டிட்டாச்மென்ட்கள் அதற்கான முஸ்தீபுகளில் இருக்கும்போதே- ஒரு டிட்டாச்மென்ட் தனியாக பிரிந்து- இந்திய தூதரகத்தை முற்றுகையிட்டு- அங்கே சிறைப்பட்டிருப்பவர்களை மீட்க வேண்டும். இந்த எல்லா தாக்குதல்களுமே- நாளை இரவு பதினொரு மணிக்கு ஆரம்பித்து- விடிவதற்குள் முடிய வேண்டும். புரட்சிப்படை தளபதி ஹெண்டார்ஸனை உயிரோடு பிடிக்க வேண்டும். சாகடிப்பது கடைசி பட்சம்."

விமானப் படைத் தளபதி அறிக்கையை படித்து முடிக்க- ராணுவ அமைச்சர் எழுந்தார்.

"சற்று ஓய்வு எடுத்துக்கொண்டு- காலை பத்து மணி அளவில் மறுபடியும் இதே அறையில் கூடுவோம்."

அதிகாரிகள் கலைந்தார்கள்.

ஸ்க்வாட்ரன் லீடர் சுக்தேவ், விமான லெப்டினென்டுகள் வல்லப், சித்ரஞ்சன் அந்த அறையிலிருந்து வெளிப்பட்டார்கள். வடக்கு திசை முழுவதும் ரத்த முலாம். இன்னும் சில விநாடிகளில்- சூரியன் எட்டிப் பார்க்கும் சூழ்நிலை.

"இரவே அவர்களை நசுக்கியிருக்க வேண்டும்... போய் பராக்கு பார்த்துவிட்டு வந்தது தவறு..." சுக்தேவ் கோபப்பட்டான்.

"அந்த பாரஸ் தீவில் இருக்கும் புரட்சிப்படை நம் இந்திய ராணுவத்துக்கு முன்னால் ஒரு மூட்டைப்பூச்சி மாதிரி... நாம் அநாவசியமாக பயப்படுகிறோம். துணிந்து இறங்கினால் சில நிமிடங்களே போதும்."

"நாம் பயப்படுவது புரட்சிப் படைக்காக அல்ல..."

"தெரியும்... பிரதமர் சகோடாவையும், இந்தியத் தூதரின் குடும்பத்தையும் புரட்சிப் படைக்குப் பலியாக்க விட்டுவிடக் கூடாது என்பதற்காக பொறுமையோடு இருக்கிறோம்..."

மூன்று பேரும் சிகரெட்டுகளை பற்றவைத்து குளிரை பொருட்படுத்தாமல் பேசிக்கொண்டே நடக்க-

மருத்துவப் பிரிவைச் சேர்ந்த- உதவியாளர் ஒருவ எதிர்ப்பட்டார்.

"மிஸ்டர் வல்லப்..."

வல்லப் நின்றான்.

"எஸ்..."

"உங்களைப் பார்த்து பேச மிஸ் செல்வி- வரவேற்பறையில் வந்து காத்திருக்கிறார்."

"மிஸ் செல்வி...?" திகைத்தான்.

"எஸ்... ஏர்ஹோஸ்டஸ்..."

வல்லப் அவசரமாக சுக்தேவ், சித்ரஞ்சனிடம் விடைபெற்றுக் கொண்டு- வரவேற்பறையை நோக்கிப்போனான். 'இவள் எதற்காக வந்திருப்பாள்...? ஹரேஷை பற்றி விசாரிக்கவா?'

வரவேற்பறையில்- நகம் கடித்துக்கொண்டு காத்திருந்த செல்வி இவனைப் பார்த்தும்- சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக்கொண்டு எழுந்தாள்.

"குட்மார்னிங் மிஸ்டர் வல்லப்..."

"கு...கு...குட்மார்னிங்..." சொன்னவன்- கையிலிருந்த சிகரெட்டை 'ஆஷ் டிரே'க்குக் கொடுத்தான்.

"உட்காருங்க..." நாற்காலியைக் காட்டினான்.

அவள் உட்காராமல் அந்தக் குளிரிலும் வியர்த்துப் போயிருந்த முகத்தோடு கேட்டாள்: "ஹரேஷ் சென்ற விமானம் திரும்பலையாமே...?"

"ஆமாம்..."

"எ...என்னாயிற்று?" செல்வி கேட்க, வல்லப் சில விநாடிகள் பேசத் தயங்கிவிட்டு சொன்னான். "எரிபொருள் அடைப்பு."





"விமானம் விழுந்துவிட்டதா...!"

"அப்படித்தான் செய்தி. ஆனா, பாராசூட் மூலம் ஹரேஷ் கீழே குதித்துவிட்டார்..."

"அவரைப் பற்றிய தகவல் ஏதாவது?"

"........"

வல்லப் லேசாய் தலை குனிந்து மவுனம் சாதிக்க- அவன் அவளை நெருங்கினாள். "ப்ளீஸ்... எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள்."

பெருமூச்சோடு வல்லப் சொன்னான்.

"புரட்சிப் படையிடம் பிடிபட்டுவிட்டதாக தகவல்."

செல்வி தளர்வது தெரிந்தது.

"கவலைப்படாதீர்கள். நம் ராணுவம் ஒரு அதிரடி நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது..."

"ஹரேஷை அவர்கள்...?"

"கொல்லமாட்டார்கள். ஒரு போர்க் கைதியை விசாரிக்க சில நாட்களை எடுத்துக்கொள்வார்கள்...! இன்றைக்கு உங்களுக்கும், ஹரேஷுக்கும் கல்யாணம் நடக்க இருந்தது. இல்லையா?"

'எப்படித் தெரியும்?' என்பதுபோல் அவள் கண்ணீரோடு பார்த்தாள்.

"எனக்குத் தெரியும்... என் மனைவி சொன்னாள்..."

"அவரைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்தால் டிபன்ஸ் காலனிக்கு போன் செய்து சொல்ல முடியுமா?"

"கண்டிப்பாய்..."

வல்லப் சொல்ல- செல்வி உதட்டைக் கடித்து கண்ணீரை அடக்கிக்கொண்டே ஒரு நன்றியைச் சொல்லிவிட்டு நகர்ந்தாள்.



## 16

பிரார்த்தனா- அந்த இருள் பிரியாத விடியற்காலை வேளையில்- சிக்கலான மரங்களுக்கு மத்தியில்- உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடினான்.

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

தன்னைத்தானே கிள்ளிப் பார்த்துக்கொண்டான்.

'எப்படி தப்பித்தோம்...?'

'அந்த இந்திய விமானி மிருகத்தனமாய் அடிபட்டுக் கொண்டிருந்த விநாடிகளில் நான் இப்படி தப்பித்து வந்தது சரியா? பாவம்! அந்த இளம் விமானி எவ்வளவு மோசமாய் அடிபட்டான்? இறந்திருப்பானா? ஹெண்டர்ஸன் கேட்ட கேள்விகளுக்கு எவ்வளவு தைரியமாய் பதில் சொன்னான்? அந்த சாதுரியம்- துணிச்சல் ஒரு இந்திய ராணுவ வீரனுக்கு மட்டுமே சொந்தமானது.'

யோசித்துக்கொண்டே ஓடினவன் 'திடும்'மென்று நின்றான். அடர்த்தியான மரங்கள் நிறைந்த அந்தப் பகுதி- வழியைக் காட்டாமல் அடம் பிடித்தது. உடம்பு முழுக்க வியர்த்து வழிய- சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டு நின்றான்.

'நான் தப்பியது இந்நேரம் அவர்களுக்கு தெரிந்திருக்கும் உடனடியாய் காடு முழுவதும் பரந்து தேட ஆரம்பித்திருப்பார்கள்.'

'அவர்கள் கையில் நான் சிக்கக்கூடாது...!'

'சிக்கினால்...?'

நினைக்கவே பயமாய் இருந்தது- பிரார்த்தனாவுக்கு.

இடதுகைப் பக்கம் அடர்த்தி குறைந்த மரங்களுக்கு பக்கமாய் ஓடி- இலைகளை ஒடித்து மறுபுறம் வழி ஏற்படுத்திக்

கொண்டு- ஆளுயர புல்வெளிக்கு மத்தியில் நுழைந்தாள்.

ஒவ்வொரு புல்லின் இலையும் கூர்மையான வாள் மாதிரி நீளமாய் இருந்தது. பிரார்த்தனா ஜாக்கிரதையாய் நடந்தாள். இருப்பினும் சேலை கிழிபட்டது. முழங்கையிலும்- இடுப்பின் மென்மையான சதைப் பகுதியிலும் சிராய்ப்புகள் ஏற்பட, அந்த இடம் எரிந்தது.

'வெளிச்சம் வருவதற்குள் எங்கேயாவது பதுங்கிக்கொள்ள வேண்டும்.'

பாதி புல்வெளியை தாண்டியிருப்பாள்.

அந்தச் சத்தம் கேட்டது.

பூட்ஸ் சத்தம்.

பிராத்தனா எகிறுகிற இதயத்தை கையில் பற்றிக்கொண்டு காதுகளுக்கு உன்னிப்பைக் கொடுத்தாள்.

சத்தம் வலப் பக்கமிருந்து சாஷ்டாங்கமாய் வந்து கொண்டிருந்தது. பிரார்த்தனா மேற்கொண்டு நடக்காமல் புல்வெளிக்கு நடுவே அப்படியே மண்டியிட்டு உட்கார்ந்தாள். மூச்சிரைப்பு வெளியே கேட்டுவிடுமோ என்கிற பயத்தில்- மூச்சையும், வாயையும் சேர்த்து பொத்திக்கொண்டாள்.

பூட்ஸ் சத்தம் 'சரக் சரக்'கென்று காற்றில் அலைந்தது. அவள் உட்கார்ந்திருந்த பக்கமாய் வரத் தொடங்கியது.

## 17

ஹரேஷுக்கு நினைவு வந்தபோது- முதலில் கெட்ட நாற்றத்தை சுவாசித்தான். அடிவயிற்றில் இம்சித்த வலியோடு- கண்களைத் திறந்தான். சிறிய கருங்கல் அறை. விடிந்துவிட்டதற்கு அடையாளமாய்- ஏழடி உயரத்தில் இருந்த சதுர ஜன்னல்



வெளிச்சமாய் தெரிந்தது. உதட்டோர காயம் சுள்ளென்று எரிந்தது.

இது ஏதோ ஒரு ராணுவ மையமாக இருக்க வேண்டும்! மெல்ல எழுந்து உட்கார்ந்தான். அறையில் கடுமையான கெட்ட நாற்றம். வாந்தி வருகிற உணர்ச்சியில் குடல் பிசைந்தது.

அவன் எழுந்து- கம்பிக் கதவைப் பிடித்து உலுக்க- வெளியே நின்றிருந்த புரட்சிப் படையைச் சேர்ந்த ஒரு சிப்பாய்- துப்பாக்கியோடு எட்டிப் பார்த்தான்.

"என்ன...?"

"தண்ணீர் வேண்டும்..."

"இரு..." சொன்னவன்- தலை மறைந்து, அடுத்த நிமிடம் ஒரு தேங்காய் சிரட்டையில்- தண்ணீர் கொண்டுவந்து நீட்டினான்.

ஹரேஷ் அதை ஆர்வமாய் வாங்கி- குடிப்பதற்காக உதட்டருகே கொண்டு போனபோது திடுக்கிட்டான்.

அழுக்கான சாக்கடை நீர். நீரில் நான்கைந்து புழுக்கள் உற்சாகமாய் நீந்திக்கொண்டிருந்தன.

ஹரேஷ் அந்த சிப்பாயைப் பார்க்க- அவன் புன்னகைத்தான்.

"ம்... குடி..."

"எனக்கு சுத்தமான தண்ணீர் வேண்டும்..."

"பாரஸ் தீவில் தண்ணீர் இப்படித்தான் இருக்கும். அதில் புழுக்கள் இருந்தால் எடுத்துவிட்டு குடி! குடிக்க விருப்பமில்லையானால் கீழே கொட்டிவிடு."

அடுத்த விநாடி- ஹரேஷ் ஆத்திரமானான். சிரட்டையில் இருந்த தண்ணீரை 'ப்ளாச்'சென்று சிப்பாயின் முகத்தில் வீசினான்.

"எங்கள் இந்தியாவில் இருக்கிற நாய்கூட சுத்தமான

தண்ணீரைத்தான் குடிக்கும்... பன்றிப் பயலே!"

முகத்தில் சாக்கடை நீர் சொட்ட- ஆத்திரமான அந்த சிப்பாய் ஓடி வந்து சிறைக் கதவைத் திறந்து- துப்பாக்கியின் பின்பக்கத்தைத் திருப்பிக்கொண்டு உள்ளே போனான்.

"என்ன சொன்னாய்... இந்திய நாயே? நான் பன்றிப் பயலா? இந்தத் துப்பாக்கியின் பின்பக்கத்தால் உன் இதயத்தை அடிக்கப் போகிறேன். அது ரத்தம் கட்டி சீழ்பிடித்து..."

ஹரேஸை தன் கால்களுக்கு கீழே மல்லாத்திக்கொண்டு துப்பாக்கியை உயர்த்தினான் அந்த சிப்பாய்.

சத்தம் கேட்டு வெளியே இருந்து ஓடிவந்த ஒரு சிப்பாய்- கத்தினான். "ஜோவாஸ்! அவனை அடிக்காதே...! அடித்தால் செத்துப்போவான்... இன்னும் சில மணி நேரங்களுக்கு அவன் உயிரோடு இருக்க வேண்டும். தளபதி உத்திரவிட்டதை மறந்துவிட்டாயா?"

"தண்ணீரைக் கொடுத்தால் என் முகத்தில் வீசுகிறான்."

"அவனுக்கு நல்ல தண்ணீரைக் கொடு... இந்திய ராணுவத்தில் அவன் ஒரு அதிகாரி..."

"இருந்தால் என்ன? இவன் நம்மிடம் கைதி..."

வராந்தாவில் ராணுவ பூட்ஸ்கள் இரையும் சத்தம் கேட்டது. வெளியே நின்றிருந்த சிப்பாய் திரும்பிப் பார்த்துவிட்டு கத்தினான்.

"ஜோவாஸ்! தளபதி வருகிறார்..."

துப்பாக்கியோடு ஜோவாஸ் வெளியே ஓடிவந்தான்.

ஐம்பதடி தொலைவில் ஹெண்டார்ஸன்- நான்கைந்து அதிகாரிகள் சூழ வந்துகொண்டிருந்தான். வாயில் சுருட்டு புகைந்துகொண்டிருந்தது.

செண்ட்ரி சிப்பாய்கள் அட்டென்ஷனுக்கு வந்தார்கள்.

"என்ன செய்கிறான் அவன்...?" ஹெண்டார்ஸன்



கேட்டான்.

"இப்போதுதான் கண் விழித்தான்."

"கதவை எதற்காக திறந்தாய்?"

"தண்ணீர் கேட்டான்..."

"கொடுத்தாயா?"

"ஆமாம். ஆனால், அந்தத் தண்ணீரைக் குடிக்காமல்- என் முகத்தில் வீசியடித்துவிட்டான்."

"ஏன்?"

"தண்ணீர் சுத்தமாக இல்லையாம்..."

ஹெண்டார்ஸனின் இடப் பக்கக் கன்னம் கோபத்தில் மெலிதாய் துடித்தது. சிப்பாயை ஏறிட்டான். "இன்னொரு தடவை தண்ணீர் கொண்டுவா..."

அவன் அதே தேங்காய்ச் சிரட்டையை எடுத்துப் போய் தண்ணீரை நிரப்பிக்கொண்டு வந்தான். ஹெண்டார்ஸன் தன் சுருட்டு சாம்பலை அதில் தட்டினான்.

"கொண்டுபோய் கொடு...! அவன் இதைக் குடிக்க வேண்டும். குடிக்க வைக்க வேண்டியது உன்னுடைய பொறுப்பு. உன்னால் அவனைக் குடிக்க வைக்க முடியவில்லையென்றால், உன்னை நான் சுட்டுக் கொல்வேன்..."

அந்தச் சிப்பாய் மரண பயத்தோடு- சுருட்டுச் சாம்பல் மிதக்கும் தண்ணீரோடு ஹரேஸை நெருங்கினான்.

"ம்... குடி..."

"முட்டாளே! தண்ணீரில் சுருட்டுச் சாம்பலைக் கலந்து குடிக்கும் பழக்கம் எனக்கு இல்லை. அந்தப் பழக்கம் இருக்கிற உன்னுடைய தளபதிக்குக் கொண்டுபோய் கொடு..."

ஹெண்டார்ஸனின் கண்களில் கோப கவாலை தெரிந்தது.

"இந்த இந்திய நாய்க்கு எவ்வளவு துணிச்சல்...! அவனை

வெளியே கொண்டு வாருங்கள்."

ஹரேஷ் வெளியே கொண்டுவரப்பட்டான். சூரிய வெளிச்சம் கண்களைக் கூசியது. ஹெண்டார்ஸனின் முகம் சில விநாடிகள் பார்வையில் பட்டது. அதில் ஆகாய அளவு கோபம்.

"ம்... தண்ணீரைக் குடி..."

"........."

ஹரேஷ் காய உதட்டோடு புன்னகைத்தான். "சரி உனக்குப் பாதி... எனக்குப் பாதி... முதலில் நீ குடித்துவிட்டு கொடு..."

"ர்ரப்..." அறைந்தான் ஹெண்டார்ஸன். அந்த ஆவேச அடியில்- ஏற்கெனவே கிழிந்து போயிருந்த உதட்டில் புதிதாய் ரத்தம் எட்டிப் பார்த்தது. அது தாடையில் ஒரு அவசரப் பாதை போட்டுக்கொண்டு வழிந்தது.

"இந்தத் தண்ணீரைக் குடிக்காவிட்டால் உனக்கு இனிமேல் ஒரு சொட்டுத் தண்ணீர்கூடக் கிடைக்காது..."

"வேண்டாம்..."

"பூர்வாஸ்..."

"இவனை திறந்தவெளி மைதானத்திற்கு கொண்டு போய் நம் கொடிக் கம்பத்தில் தலை கீழாகக் கட்டிவை. அவன் வாயில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட விழக்கூடாது. தண்ணீரைக் கேட்டுக் கேட்டே இவன் கதறிக் கதறிச் சாக வேண்டும்..."

பூர்வாஸும், இன்னும் சில அதிகாரிகளும் ஹரேஷை தள்ளிக்கொண்டு போனார்கள்.

## 18

**பி**ரார்த்தனா உச்சபட்ச இதயத் துடிப்போடு புதர்களுக்கிடையே படுத்துக் கிடக்க- அந்த பூட்ஸ் சத்தம்



டுங்கிக்கொண்டிருந்தது.

'கடவுளே... இந்தப் பக்கம் அவர்கள் வராமல் இருக்க வண்டும்!' -கண்களை இறுக மூடிக்கொண்டு அப்படியே டுத்திருந்தாள்.

'சரக்... சரக்...'

'இந்தப் பக்கம்தான் வருகிறார்கள் போலிருக்கிறது! அப்படியே தவழ்ந்து வேறு பக்கம் போய்விடலாமா?'

'வேண்டாம்! என் உடம்பு அசைந்தால் இந்தப் புதர்களும் அசையும். அப்படியே படுத்திரு...'

சத்தத்தின் வேகம் இப்போது குறைந்திருந்தது.

'வேறு பக்கம் நகர்கிறார்கள் போலிருக்கிறது!' நினைத்துக் கொண்டவள்- மெல்ல தலையை உயர்த்திப் பார்த்தாள்.

ஏந்திய அதிநவீன துப்பாக்கிகளோடு நான்கு பேர் நிழல் உருவங்களாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் மறையும் வரை பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, மெல்ல எழுந்தாள் பிரார்த்தனா. 'இந்தத் திசையில் இனி போகக்கூடாது... வந்த வழியே சிறிது தூரம் போய்- வேறு திசையில் நடையைக் கட்ட வேண்டும்.'

மெதுவாய் பின்வாங்கி...

மரங்கள் அடர்ந்த அந்தப் பகுதிக்கு- வந்து இரைத்த மூச்சை சீராக்கிக்கொண்டு- நகர முயன்றவளின் தோள்மேல் ஒரு கை கனமாய் விழுந்தது.

திடுக்கிட்டுப் போய்த் திரும்பினாள்.

அந்த புரட்சிப் படை சிப்பாய்- அழுக்கான பல்வரிசையில் இளித்துக் கொண்டு நின்றான்.

குபீரென்று ஓட முயன்றவளை- கால் நீட்டி இடற வைத்தான் அவன். பின் இரண்டு கைகளாலும் அவளைப் பற்றி தூக்கி- 'ரம்' நாற்றத்தோடு அவள் காதருகே கிசுகிசுத்தான்.

"சத்தம் போட்டா ஆபத்து உனக்குத்தான். போயிட்டிருக்கு என்னோட சகாக்கள் திரும்பி வந்துடுவாங்க...! நீ புல்வெளிக்குள்ளே மறைஞ்சு படுத்திட்டிருந்ததை நான் மட்டும்தான் பார்த்தேன். அதான் நின்னுட்டேன்"

"........."

"ஏன் நின்னுட்டேன்னு தெரியுமா...? தளபதி உன்னை வார்ஷா சமவெளிக்கு கொண்டு வரும்போதே- உன்மேல எனக்கொரு கண். ஒரு இந்தியப் பெண்ணை... அதுவும் இவ்வளவு அழகான பொண்ணை நான் பார்த்ததே இல்லை."

"சீ! விடு...!" அவள் கத்த- துப்பாக்கியை ஒரு மரத்தில் சாத்தி வைத்தான்.

"சத்தம் போடாதே...! போட்டா... உன்னை பங்கு போட்டுக்க அந்தக் கூட்டமே வந்துடும்..." சொல்லிக்கொண்டே பிரார்த்தனாவை கீழே மல்லாத்தி- அவன் மேல் பாரமாய் படர்ந்தான்.

அவனை உதற முயன்றவளின் கை- விலாப் பக்கம் போக- தோல் உறையில் தூங்கிக் கொண்டிருந்த அந்தக் குறுவாள் தட்டுப்பட்டது.

பிரார்த்தனா அதை சட்டென்று உருவிக் கொண்டாள்.

"என்ன அழகான...?" அவன் வியந்து கொண்டிருக்கும் போதே- குறுவாளை அவன் முதுகுக்கு மேல் உயர்த்தி- தண்டுவடத்தின் மையப் பகுதியில் ஓங்கிக் குத்தினாள்.

"ஹக்!"

அவன் உடல் சட்டென்று ஒரு துள்ளலுக்கு உட்பட்டு ஒருபக்கமாய் சரிய- பிரார்த்தனா விருட்டென்று எழுந்து- குறுவாளை மறுபடியும் அவன் வயிற்றில் பாய்ச்சி நிறுத்தினாள். பாரசீக மொழியில் அவன் வீறிட-

ரத்தம் பீறிட்டு தெறித்தது.



பிரார்த்தனா ஓடிப்போய்- மரத்தில் சாய்த்து வைத்திருந்த அந்தத் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு- குறுவாளால் குத்தப்பட்டவனை திரும்பிப் பார்த்தாள்.

அவனோ உயிர் பிரியும் கடைசி விநாடிகளில் இருந்தான்.

'இவன் வீறிட்ட சத்தம் மற்ற சிப்பாய்களுக்கு கேட்டிருக்குமா?'

அவள் சந்தேகமாய் யோசிப்பதற்குள்-

பூட்ஸ் சத்தங்கள் தொலைவில் கேட்க ஆரம்பித்தன.

## 19

ஹெண்டார்ஸன் இந்திய ராணுவ அமைச்சரோடு தொலைபேசி பேச்சில் தீவிரமாய் இருந்தான்.

"ராணுவ நடவடிக்கை நிச்சயமாக இருக்காதே?"

"இருக்காது..."

"எங்களுடைய ராணுவ ஆட்சியை இந்திய அரசு அங்கீகரித்து உலக நாடுகளுக்குச் செய்தி கொடுத்துவிட்டதா?"

"அந்தச் செய்தியை நாங்கள் கொடுப்பதற்கு முன் உங்களிடமிருந்து ஒரு உத்தரவாதம் வேண்டும்."

"என்ன...?"

"இந்திய தூதரகத்தைச் சேர்ந்தவர்களோ, பிரதமர் சகோதரோ... உங்கள் புரட்சிப் படையால் கொலை செய்யப்பட்டிருக்கக் கூடாது."

"அவர்கள் நிச்சயமாய் உயிரோடு இருப்பார்கள். எங்கள் கோரிக்கைகளை நீங்கள் நிறைவேற்றியதும் அவர்கள் இந்தியாவுக்குப் பத்திரமாய் திருப்பி அனுப்பப்படுவார்கள்."

"பிறகு..."

"சொல்லுங்கள்..."

"உங்களிடம் பிடிபட்ட எங்கள் விமானி ஹரேஷ் நல்ல முறையில் நடத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட வேண்டும்..."

"ஹரேஷைப் பற்றி ஒரு கவலையான செய்தி."

"என்ன...?"

"விமானத்திலிருந்து அவர் குதிக்கையில் பாராசூட் சரியாக விரியாததால்– தரையில் மோதி அடிபட்டுவிட்டது. தண்டுவடத்தின் கீழ்ப்பகுதி நொறுங்கிவிட்டது. சிகிச்சைக்கு சேர்த்துள்ளோம். உயிர் பிழைப்பது தொண்ணூறு சதவீதம் சாத்தியமில்லை என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். இருந்தாலும் தீவிர சிகிச்சை கொடுத்துக் கொண்டிருக்கிறோம்..."

மறுமுனையில் ராணுவ அமைச்சர் திடுக்கிட்டார்.

"உயிர் பிழைப்பது சாத்தியமில்லையா?"

"ஆமாம்..."

"அவரைத் தனி விமானம் மூலம் உடனடியாய் இந்தியாவுக்கு அனுப்ப முடியுமா?"

"பயணத்தை உங்கள் விமானி தாங்கமாட்டார் என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். இங்கே அவருக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்படுகிறது. அவர் குணமாகும் வரை இங்கு இருக்கட்டும். ஏதாவது நேர்ந்துவிட்டால் உடம்பை அனுப்பி வைக்கிறோம். மிகவும் துணிச்சலானவர் மிஸ்டர் ஹரேஷ். விபத்து நடந்து ஒரு பத்து நிமிடம் வரைக்கும் அவர் தெளிவாகவே பேசினார்..."

"இந்திய தூதரோடு நான் தொடர்புகொள்ள முடியுமா?"

"மன்னிக்கவும். எங்கள் கோரிக்கைகள் முதலில் நிறைவேற வேண்டும்."

"கண்டிப்பாக நிறைவேறும்."

"அறிக்கை எப்போது வெளியிடுவீர்கள்?"

"நாளைக் காலை... பத்து மணிக்கு."



"அறிக்கையின் வாசகங்களில் தெளிவு இருக்க வேண்டும். [..]கமான வார்த்தைகள் வேண்டாம்."

"அறிக்கை தெளிவாகவே இருக்கும்."

"அடுத்தவாரம் நடைபெற இருக்கும்– எங்கள் ஆட்சி [..]ழாவுக்கு இந்தியா சார்பாக யார் கலந்துகொள்ளப் [..]பாகிறார்கள்?"

"இன்னும் முடிவு செய்யவில்லை."

"நீங்கள் கலந்து கொண்டால் சிறப்பாக இருக்கும்."

"உங்கள் ஆர்வத்தை எங்கள் பிரதமரிடம் சொல்கிறேன்."

"நன்றி..." கையிலிருந்த டெலிபோன் ரிஸீவரை அமர்த்திவிட்டு, ஹெண்டார்ஸன் திரும்பினான்.

"பூர்வாஸ்..."

"ஸார்..." தள்ளி நின்றிருந்தவன் அருகில் வந்தான்.

"அந்த இந்திய விமானியை நம் ராணுவ மைதான கொடிக் [..]ம்பத்தில் தலைகீழாகத் தொங்கவிட்டு இப்போது எவ்வளவு [..]நேரமாகிறது...?"

"ஆறு மணி நேரம்..."

"எப்படியும் இரவுக்குள் இறந்துவிடுவான் இல்லையா?"

"ஆமாம்..."

"நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்..."

"சொல்லுங்கள்."

"அவன் இந்த ராத்திரிக்குள் இறக்கவில்லையானால்... இரும்புத் தடியால் அவன் தண்டு வடத்தை நொறுக்கி– [..]குற்றுயிராக சிகிச்சைக்கு சேர்த்துவிடு..."

"எஸ்... ஸார்..."

"அவன் இறக்கும்வரை எந்த டாக்டரும் அவன் அருகே போகக்கூடாது."

பூர்வாஸ் தலையாட்டினான்.

"பிரார்த்தனா கிடைத்ததாய் ஏதாவது செய்தி உண்டா?"

"இதுவரைக்கும் இல்லை..."

"அவள் கைக்கு கிடைக்கட்டும்... இந்த ஷார்மோஷா நகரத் தெருக்களில் அவளை ஓடவிட்டு..." பேச்சை முடிக்க முடியாமல்... அருகில் இருந்த டீபாயை எட்டி உதைத்தான் ஹெண்டார்ஸன்.

இரவு பத்து மணி. புதுடெல்லி ராணுவ விமான நிலையம். மொத்தமும் இருட்டில் இருக்க– ஓடுதளத்தில் மூன்று பார்மேஷன்களைச் சேர்ந்த மிக் ரக விமானங்கள் விசுவாசமாய்க் காத்திருந்தன. ஸ்க்வாட்ரன் லீடர்களும், விமான லெப்டினென்டுகளும் 'ஆபரேஷன்ஸ்' அறையில் குரூப் காப்டனின் கட்டளைகளில் இருந்தார்கள்.

"உங்கள் விமானங்களைப் பார்த்ததும்... புரட்சிப் படையின் விமானங்கள் தாக்க வரலாம். கண்களில் 'ஸைரோ'வை மிகத் துல்லியமாய் அமைத்து சுட வேண்டும். மெயின் ஏர் பிரேமில் தேவையான வெடிகுண்டுகள் நிரப்பப்பட்டுள்ளன. பிட்ச் கண்ட்ரோலிலும், ஹைட்ராலிக்ஸிலும் பழுது ஏற்பட வாய்ப்புண்டு. பார்த்துக் கொள்ளுங்கள்."

தலையாட்டினார்கள்.

"பாரஸ் தீவின் மிக முக்கியமான விமான நிலையங்கள் எட்டு. வரைபடத்தில் அவை துல்லியமாய் காட்டப்பட்டிருக்கின்றன. விமான நிலையங்களின் 'ரன்வே'க்களை முதலில் நாசப்படுத்துங்கள். பின் ரேடார் நிலையங்களை... கட்டுப்பாட்டு கேந்திரங்களை...! ஆனால், வெடிகுண்டுகளை வீணாக்காதீர்கள். பீரங்கியின் குண்டுகளில் சிக்கிக் கொள்ளாதீர்கள்."

தலையாட்டினார்கள்.

"சரியாய் பதினொரு மணிக்குப் புறப்படுகிறீர்கள்.



அதுவரைக்கும் பாரஸ் தீவைப் பற்றிய சி.டி.யைப் போட்டுப் பாருங்கள்..."

"ஏற்கெனவே பலமுறை போட்டுப் பார்த்துவிட்டோம்."

"பாதகமில்லை... புறப்படும் வரை போட்டுப் பாருங்கள்... உங்களுக்குள் ஒரு ஆலோசனை வைத்துக்கொள்ளுங்கள்..."

குரூப் காப்டன் பக்கத்து அறைக்கு போய்விட– மூன்று பார்மேஷன்களைச் சேர்ந்தவர்களும் சி.டி.யைப் போட்டு– பாரஸ் தீவின் அமைப்பை மறுபடியும் கண்களில் வாங்கினார்கள். நடுநடுவே சிகரெட் பிடித்தார்கள். இரண்டு தடவை பால் கலக்காத கறுப்பு டீ பருகினார்கள்.

பத்தே முக்கால் மணிக்கு 'வார் ஜாக்கெட்' அணிந்து– தலைக்கு 'ஹெல்மெட்' பொருத்தி– விமான ஓடுதளத்தின் விளிம்புக்கு வந்தார்கள்.

உயர் அதிகாரிகள் கைகுலுக்கி– தோளில் தட்டி அனுப்பி வைக்க– சரியாய் பதினொரு மணிக்கு இருட்டில் நின்றிருந்த தத்தம் விமானங்களை நோக்கி ஓடினார்கள். 11.05–க்கு அந்த ஒன்பது மிக் ரக விமானங்களும் இருட்டு வானத்து காற்றைக் கிழித்துக் கொண்டு வேகமாய் விண்ணில் பறந்தன.

## 20

ஹரேஷுக்கு மூச்சுவிட சிரமமாய் இருந்தது. மார்பை அடைத்தது. இரும்பாலான கொடிக்கம்பம்– சூரியனின் உபயத்தால் சூடேறி கெண்டைக் கால்களையும், முதுகையும் சுரீரென்று சுட்டது. உடம்பு வியர்த்து வியர்த்து உலர்ந்து போயிருக்க– தொண்டை காயந்து, உதடுகள் வெடித்து– அந்த உதட்டில் ஈக்கள் மொய்த்தன.

ஹரேஷுக்கு செல்வியின் ஞாபகம் வந்தது.

அவள் வயிற்றில் வளரும் குழந்தையின் நினைவும் தொடர்ந்தது. இரண்டு நாட்களாய் அவனோடு பேசிக்கொண்டிருந்த வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்தன.

"ஹரேஷ்..."

"ம்..."

"நம்ம கல்யாணம் முடிந்ததும்..."

"முடிந்ததும்...?"

"நேரா ஆக்ரா போறோம்."

"ஆக்ரா போய்..."

"தாஜ்மகாலைப் பார்க்கிறோம்..."

"கல்யாணம் முடிந்த கையோடு முதல் முதலா ஒரு சமாதிக்கா போகணும்?"

"அது சமாதி இல்லை ஹரேஷ்... காதலர்களின் கோயில். நீங்களும், நானும் முதல் முதலா சந்திச்ச இடம் ஆக்ரா விமான நிலையம். அன்னிக்கு ராத்திரி ஆக்ரா கண்டோன்மெண்டில் வாரண்ட் ஆபீஸர் மிஸ்ரா குடும்பக் கல்யாணம். அந்தக் கல்யாணத்தைப் பார்த்துட்டு– பவுர்ணமி சந்திரனில் தாஜ்மகாலைப் ரசிக்க கல்யாண வீட்டிலிருந்து ஒரு கும்பல் புறப்பட்டப்போ... நீங்களும், நானும் போனோம்... கும்பலிலிருந்து விலகிப் போய் தள்ளி உட்கார்ந்து அந்த ராத்திரி பூராவுமே தாஜ்மகாலைப் பற்றி பேசினோம்... ஞாபகமிருக்கா?"

"இருக்கு..."

"நம்ம காதல் உருவான இடம் தாஜ்மகால்... நம்ம கல்யாணம் முடிந்ததும் அந்தத் தெய்வீகக் காதலர்கள்கிட்டதான் முதல் முதல்ல ஆசி வாங்கணும்..."

அருகில் பூட்ஸ் சத்தம் கேட்டது.

ஹரேஷ் சிரமப்பட்டு கண்களைத் திறந்தான்.

அந்த சிப்பாய் ஜோவாஸ்– மிகவும் கிட்டத்தில் நின்றிருந்தான்.



சிரித்தான். "எப்படி இருக்கிறது இந்திய விமானியே...? இப்படிக் கொடிக் கம்பத்தில் தலை கீழாய் தொங்கவிடப்பட்டவர்கள் ஒரு ராத்திரிக்கு மேல் உயிரோடு இருந்ததில்லை... நீ எத்தனை மணி நேரம் தாக்குப்பிடிப்பாய் என்று தெரியவில்லை..."

"எ...எ...என்னை அ...அவிழ்த்து விடு..."

"எனக்கு அதிகாரமில்லை... உன் உயிர்போன பின்னாலும் கூட தளபதியைக் கேட்டுத்தான் பிணத்தை எடுக்க முடியும்."

"கொ...கொஞ்சம் த...தண்ணீர்..."

"அடடே! உனக்குத்தான் இந்தப் பாரஸ் தீவின் தண்ணீர் பிடிக்காதே..."

கொஞ்சம் தொலைவில் நின்றிருந்த சிப்பாய் ஒருவன் கத்தினான். "ஏய்... ஜோவாஸ்! அங்கே அவனோடு என்ன பேச்சு...?"

ஒன்றுமில்லை.

ஹரேஷ் சோர்ந்து போய் கண்களை மூடிக்கொண்டான்.

## 21

நடுநிசி. நேரம் 1.15. பாரஸ் தீவின் ராணுவத் தலைமையகம். ராணுவ அதிகாரிகள் மதுக்கோப்பைகளை சப்பிக்கொண்டிருக்க– கையில் புகையும் சுருட்டோடு ஹெண்டார்ஸன் பேசிக் கொண்டிருந்தான்.

"இந்தியா நம் வழிக்கு இணங்கி வந்துவிட்டது. இந்தப் பாரஸ் தீவில் ராணுவ ஆட்சி மலர்வதை அங்கீகரித்து நாளைக் காலை பத்து மணிக்கு அவர்கள் அறிக்கை வெளியிடப் போகிறார்கள். நாம் நடத்தப் போகும் ஆட்சி அமைப்பு விழாவிலும் கலந்துகொள்ளப் போகிறார்கள். இது நம் ஆட்சிக்கு கிடைத்திருக்கிற முதல் வெற்றி..."

ஒரு ராணுவ அதிகாரி போதையோடு எழுந்தார். குழறுகிற

குரலில் சொன்னார். "எனக்கு சந்தேகமாக இருக்கிறது."

"என்ன சந்தேகம்...?"

"இந்திய அரசு இவ்வளவு இறங்கி வருவார்களா என்று...?"

"ஏன் வரமாட்டார்கள்...? அவர்களுக்கு வேண்டிய நபர்களின் உயிர்கள் நம் கையில். இறங்கி வந்துதானே ஆகவேண்டும்?"

"எனக்கு இந்தியாவின் மேல் நம்பிக்கையில்லை. இந்தச் சரணடைந்த பேச்சுகளுக்குப் பின்னால் ஏதோ சங்கதி இருக்கிறது..."

ஹெண்டார்ஸன் சுருட்டின் சாம்பலை 'ஆஷ்டிரே'யில் தட்டிவிட்டு, அந்த அதிகாரியைப் பார்த்துச் சிரித்தான்.

"கண்ணாடி வீட்டுக்குள் இருந்துகொண்டு கல்லெறிகிற அளவுக்கு இந்திய அரசு முட்டாள்தனமானதில்லை."

"நாம் எதற்கும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்."

"வேண்டிய அளவு எச்சரிக்கையாக இருக்கிறோம்."

"தப்பிப் போன பிரார்த்தனா இன்னும் நம் கைக்கு கிடைக்கவில்லை. நம் சிப்பாய் ஒருவன் அவளால் கொல்லப் பட்டிருக்கிறான்."

"அவளைத் தேடும் முயற்சிகள் தீவிரமாயுள்ளன. எப்படியும் விடிவதற்குள் கண்டுபிடித்துவிடுவோம்..."

தொலைபேசி கிணுகிணுத்தது.

ஹெண்டார்ஸன் சுருட்டை 'ஆஷ்டிரே'க்குள் திணித்துவிட்டு, ரிஸீவரை எடுத்தான். "ஹலோ..."

குரல் பதறியது. "சவுத் ஜோன் ஆர்டிலரி யூனிட் கமாண்டர் அஷ்போனியா ஸார்."

"சொல்லுங்க..."

"நம் ஆகாயத்தில் இந்திய போர் விமானங்கள்."

"என்னது, போர் விமானங்களா...?"

"ஆமாம். மொத்தம் மூன்று பார்மேஷன்கள். அவர்கள் வீசிய வெடிகுண்டில் ஹார்ஷா ராணுவ காரிஸன்கள் எரிந்து



கொண்டிருக்கின்றன."

"முட்டாள்களே! பீரங்கிகளை வைத்துக்கொண்டு என்ன செய்கிறீர்கள்?"

"சுட்டோம்... தப்பிவிட்டார்கள்."

"ராடாரில் இன்னமும் விமானங்கள் தெரிகின்றனவா?"

"ஆமாம்."

"சவுத் ஜோனில் எத்தனை ரெஜிமெண்டுகள் உள்ளன...?"

"மூன்று..."

"சமாளித்துவிடலாம், சுடுங்கள். எந்த இந்திய விமானமும் நம் ஆன்டி ஏர் கிராப்ட் பீரங்கி குண்டுகளுக்கு தப்பக் கூடாது..." கோபமாய் மொழிந்து ரிஸீவரை எறிந்துவிட்டு எழுந்தான் ஹெண்டார்ஸன்.

"இந்தியர்கள் ஏமாற்றிவிட்டார்கள்."

"நான் சொன்னது சரியாய்ப் போய்விட்டது."

"இந்திய தூதரையும், அவருடைய மனைவியையும், சகோடாவையும் ஹார்மோஷா தெருவின் முச்சந்தியில் தூக்கிலிடுவோம். இந்திய விமானியின் உடலை நார் நாராய் கிழித்துப் போடுவோம்... பூர்வாஸ்! அந்த இந்திய விமானியை துப்பாக்கிக் குண்டுகளால் துளைத்துவிடு" சொன்ன ஹெண்டார்ஸன், வெளியே நின்றிருந்த ஜீப்பை நோக்கி ஓடினான்.

## 22

மூன்று பார்மேஷன்களைச் சேர்ந்த அந்த மிக் ரக விமானங்கள் ஸ்க்வாட்ரன் லீடர்கள் தலைமையில் அற்புதமாய் போரிட்டன. புரட்சிப் படையின் ஆன்டி ஏர் கிராப்ட் பீரங்கிகளின் குண்டுகளுக்கு சிக்காமல் போக்குக் காட்டி- இருட்டு வானத்தில் நீச்சலடித்து முக்கிய ராணுவ கேந்திரங்களை

நொறுக்கின. ராணுவ கூடாரங்களில் இருந்த லெப்டினென்டு கர்னல்கள்– பதற்றப்பட்டார்கள் ... ஆத்திரப்பட்டார்கள், ராணுவ பாஷையில் இந்திய விமானிகளைத் திட்டினார்கள். பின் கொஞ்சம் கொஞ்சமாய் பயப்பட்டார்கள்.

புழுதிப் படலங்களுக்கு நடுவே புரட்சிப் படையைச் சேர்ந்த வீரர்களும், ராணுவ சிப்பாய்களும் பிணங்களாய் மாறிக்கொண்டிருந்தார்கள்.

கர்னல்கள் பின் வாங்கி– குண்டு வீச்சில் தப்புவதற்காக தோண்டப்பட்ட குழிகளில் குப்புறப் படுத்துக்கொண்டு ஆலோசித்தார்கள்.

"என்ன செய்யலாம்?"

"இந்திய விமானங்களைச் சமாளிக்க முடியாது..."

"பின்வாங்கிப் போவதுதான் உத்தமம்."

"வீரர்களில் பாதி பேருக்குமேல் இறந்துவிட்டார்கள்."

"எதிர்பாராத தாக்குதல் இது..."

பேசிக்கொண்டிருக்கும்போதே தலைக்கு மேலே தாழ்வாய் வானத்தையே அடைத்துக் கொண்டு போகிற மாதிரி ஒரு மிக் விமானம் பறந்தது. அதன் இறக்கைகளிலிருந்து தீச்சரமாய் ராக்கெட்கள் பாய்ந்து இறங்க– அந்தப் பகுதி ஒரு தீபாவளியாக மாறிற்று.

தீ நாக்குகளோடு வீரர்கள் சிதற, ஒரு கர்னல் மாபெரும் அலறலோடு தீப்பந்தமாய் ஓடி உருண்டார்.

பீரங்கிகள் உற்சாகமில்லாமல் முழங்க–

இந்திய விமானங்க்ள், பீரங்கிகளின் குண்டுகளை அலட்சியப்படுத்திக்கொண்டு உயரம் பிடித்தன.

ஸ்க்வாட்ரன் லீடர் சுக்தேவ் லாவகமாய் திராட்டலை கையாண்டு கொண்டே மைக்ரோ போனில் கரகரத்து– தன்னோடு இயங்கும் லெப்டினென்டுகளுக்கு கட்டளைகளை



அனுப்பினான். "வல்லப்...! கேமோபிளாஜில் மறைந்திருக்கும் அந்த ராணுவ கூடாரம் உன் கண்ணில் படுகிறதா?

"படுகிறது..."

"தாக்கு... நாசம் செய்..."

"சித்ரஞ்சன்! உன் விமானத்தின் இடது பக்கம் நேர் கீழே ஆன்டி ஏர் கிராப்ட் பீரங்கிகள்– குழிகளில் பதுக்கப்பட்டு துப்பாக்கியாளர்கள் காத்திருக்கிறார்கள். நீ அவர்களை நொறுக்கு..."

"ரோஜர்..."

"அதிக உயரம் இழக்காதே... அம்யூனிஷனை பார்த்து உபயோகி."

"ரோஜர்..."

சுக்தேவ் உற்சாகமாய் பறந்தபடியே கீழே பார்த்தான். ராணுவ கூடாரங்களும், டாங்கிகளும் தீவிரமாய் எரிந்து கொண்டிருக்க– புகை மண்டலத்துக்கு நடுவே வீரர்கள் உயிருக்குப் பயந்து தாறுமாறாய் ஓடுவது தெரிந்தது. வல்லப் வீசிய வெடிகுண்டில் 'கேமோபிளாஜ்' செய்யப்பட்டிருந்த அந்த ராணுவ கூடாரம் மண், மரம், மட்டை, மனிதர்களோடு கன்னாபின்னா என்று சிதறுவது தெரிந்தது.

"வல்லப்! குட்"

"அடுத்த இலக்கு..."

"வடக்கு பகுதிக்கு போய்விடுவோம்..."

"ராணுவ பேரக்ஸை தாக்கலாமா...?"

"வேண்டாம். நமக்கு உத்தரவில்லை. மேலும், ராணுவ பாரக்ஸில் இந்திய தூதரின் குடும்பமும், பிரதமர் சகோடாவும் அடைக்கப்பட்டிருக்கலாம். அதையொட்டிய மெடிக்கல் கேர் யூனிட்டில் ஹரேஷ் சிகிச்சையில் இருக்கலாம்..."

"நம் பாராசூட் வீரர்கள் கீழே இறங்கிவிட்டார்களா?"

"எல்லோரும் இறங்கிவிட்டார்கள்."

"காப்டன் கீழே பாருங்கள்... வரிசையாய் நீலநிற விளக்குகள்."

"அது ஒரு விமானத்தளத்தின் ரன்வே..."

"அதை நாசம் செய்யட்டுமா?"

"அதற்குத்தானே வந்திருக்கிறோம்."

வல்லப் செயல்பட்டான்.

அடுத்த சில விநாடிகளில்– அந்த விமானத்தளம் ஆங்காங்கே தீப்பற்றிக்கொண்டு எரிந்தது.

"வல்லப்! வெல்..."

மூன்று மிக் ரக விமானங்களும் வடக்குப் பகுதி நோக்கி– வீறிட்டு வானத்தில் பறந்தன.

## 23

**ஹெ**ண்டார்ஸன் இந்திய தூதரக கட்டடத்திற்கு முன்னால் ஜீப்பை நிறுத்தி– ஒரு கனமான ரிவால்வரோடு கீழே குதித்து உள்ளே ஓடினான்.

வரிசையாய் துப்பாக்கிகளோடு நின்றிருந்த ராணுவ வீரர்களுக்கு நடுவே ஓடி, மாடிப்படிகளில் தாவி–

தூதரின் அறைக்குள் நுழைந்தான்.

ராணுவ அதிகாரிகள் வரிசையாய் ஒரு சோபாவில் உட்கார்ந்திருந்தார்கள். ஹெண்டார்ஸன் கத்தினான்.

"கர்னல்ஸ்! நாம் ஏமாற்றப்பட்டுவிட்டோம். இந்திய ராணுவம் நம்மை நொறுக்கிக் கொண்டிருக்கிறது. ராடார் நிலையங்களையும், ராணுவ கேந்திரங்களையும் அழித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்திய ராணுவம் நம்மை ஏமாற்றிய குற்றத்துக்காக அந்தத்



தூதரக குடும்பத்தையும், சகோடாவையும் சுட்டுக்கொன்று– அவர்களின் பிணங்களை ஹொர்மோஷா நகரின் முச்சந்தியில் தூக்கிவிட வேண்டும்..."

ராணுவ அதிகாரிகள் அசையாமல் உட்கார்ந்து கொண்டு ஹெண்டார்ஸனையே இமைக்காமல் பார்த்தார்கள்.

ஹெண்டார்ஸன் கத்தினான். "முட்டாள்களே! நான் பதறிப் போய் பேசிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் அசையாமல் உட்கார்ந்திருக்கிறீர்களே?"

மறுபடியும் மவுனமாய் பார்த்தார்கள்.

"என்னாயிற்று உங்களுக்கு?"

வீறிட்டு கத்திய ஹெண்டார்ஸனின் பின்னங்கழுத்தில் சில்லென்று ஏதோ ஸ்பரிசம் தாக்கியது.

திடுக்கிட்டு திரும்பினான்.

இந்தியச் சிங்க 'பாட்ஜ்'களோடும், வர்ணப் பட்டைகளோடும் ருடை தரித்த இந்திய ராணுவ கமாண்டர்கள் இயந்திரத் ப்பாக்கிகளோடு நின்றிருந்தார்கள். உதடுகளில் சாகசப் ன்னகை.

"ஹெண்டார்ஸன்! எங்கள் உத்தரவில்லாமல் அவர்கள் சமாட்டார்கள். கடந்த பத்து நிமிடமாய் அவர்கள் இந்திய ணுவப் படையிடம் பிடிபட்ட கைதிகள். உன் ராணுவ டுப்பில் துப்பாக்கிகளை ஏந்தி– வெளியே நிற்கும் வீரர்கள் ங்கள் வீரர்கள். இது ஒரு அதிரடி தாக்குதல். எனவே, னக்கு இதெல்லாம் ஆச்சரியமாக இருக்கும். அந்த ரிவால்வரை ப்படித் தருகிறாயா?"

ஹெண்டார்ஸன் விழித்து, திகைத்து, வியர்த்து– பின் ரிவால்வரை ட்டினான். ஒரு கமாண்டர் அதை வாங்கிக்கொண்டே ன்னார். "எங்கள் நாட்டு தூதரும், அவருடைய மனைவியும், ரதமர் சகோடாவும் எங்கள் பாதுகாப்பில் பத்திரமாக ருக்கிறார்கள். பிரார்த்தனாவை நீ கூட்டிப்போனதாய் உன்

கர்னல்கள் சொன்னார்கள்... அவள் உயிரோடு இருக்கிறாளா? இல்லை... கொன்றுவிட்டாயா?"

"அ...அவள் தப்பிவிட்டாள்..."

"பொய் சொல்லாதே...!"

"இ...இல்லை...இது நிஜம்..."

## 24

"அந்த இந்திய விமானியை துப்பாக்கி குண்டுகளால் துளைத்துவிடு."

ஹெண்டார்ஸனின் கட்டளையை சிரமேற்கொண்ட பூர்வாஸ், ஒரு இயந்திரத் துப்பாக்கியோடு ஜீப்பில் ராணுவ பாரக்ஸை நோக்கி வேகமாய் போய்க் கொண்டிருந்தான்.

மேலே இந்திய விமானங்கள் உறுமிக் கொண்டிருந்தன. பூர்வாஸுக்குள் ஆத்திரம் கொப்பளித்தது. 'இந்தியர்கள் ஏமாற்றிவிட்டார்கள்... இனிப்பான சாகச வார்த்தைகளைக் பேசிக் கொண்டே ராணுவத்தை ஏவிவிட்டார்கள்.'


பூர்வாஸுக்கு இந்தியர்கள் மேல் ஏற்பட்ட ஒட்டுமொத்த வெறுப்பும் இப்போது ஹரேஷின் மேல் திரும்பியது. 'இந்தத் துப்பாக்கியில் இருக்கும் தோட்டாக்கள் தீரும்வரை அவனைச் சுட்டு, உடம்பைப் பொத்தலாக்க வேண்டும்.'

ஜீப் ராணுவ பாரக்ஸுக்குள் நுழைந்தது. காலி திடலுக்கு வந்ததும் ஆத்திரமாய் 'பிரேக்'கிட்டு நின்றது.

துப்பாக்கியோடு இறங்கினான்.

சாம்பல் இருட்டில் கொஞ்சம் தொலைவில் கொடிக் கம்பமும், அதில் தலைகீழாய் கட்டப்பட்டிருந்த ஹரேஷும் தெரிய–





வசதியான தூத்தில் நின்றுகொண்டு இயந்திரத் துப்பாக்கியை உயர்த்தினான் பூர்வாஸ்.

"இந்தியப் பன்றியே! உன்னுடைய தேசம் எங்களை ஏமாற்றிவிட்டது. நயவஞ்சகம் செய்துவிட்டது. நாங்கள் பாடம் கற்பிக்காமல் விடமாட்டோம். அதற்கு நீதான் முதல் பலி..."

சொன்னவன் டிரிக்கரை தட்டி- தன் உடம்பு அதிர அதிர பற்களைக் கடித்துக்கொண்டு தோட்டாக்கள் தீரும்வரை சுட்டான்.

தலைகீழாக கட்டப்பட்டிருந்த உடம்பு- தோட்டாக்களின் பீறிட்ட வேகத்தை தாங்கிக்கொள்ள முடியாமல் அதிர்ந்து- அடங்கியது.

தோட்டாக்கள் தீர்ந்துபோன துப்பாக்கியை வீசிவிட்டு, ஜீப்புக்கு போக திரும்பியவன் அதிர்ந்து போனான்.

பிரார்த்தனாவும், ஹரேஷும் கைகளில் இயந்திரத் துப்பாக்கிகளை ஏந்திக்கொண்டு நின்றிருந்தார்கள்.

ஹரேஷ் புரட்சிப்படையின் சீருடையில் இருந்தான். புன்னகைத்தான். "என்ன பார்க்கிறாய்...? அந்த கொடிக் கம்பத்திலிருந்து நான் விடுபட்டு அரை மணி நேரமாயிற்று. நான் விடுபட்டதற்குக் காரணம் பிரார்த்தனா. பிரார்த்தனாவின் கையிலிருந்த எல்.எம்.ஜி. துப்பாக்கி இங்கே காவலுக்கு இருந்த பதினொரு பேரை சுட்டுக் கொன்றிருக்கிறது.

போர் நடவடிக்கைகள் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது- எப்படியும் என்னைக் கொல்ல நீயோ, உன் தளபதியோ இங்கே வரலாம் என்று என் மனசுக்குப்பட்டது. எனவே, எனக்கு பதிலாக உன்னுடைய புரட்சிப் படையைச் சேர்ந்த சிப்பாய் ஜோவாஸை தலைகீழாகக் கட்டி தொங்கவிட்டோம். அவன் கத்தாமல் இருப்பதற்காக வாயில் துணியையும் அடைத்து வைத்தோம். அவன் என்னிடம் நடந்துகொண்ட முறைக்காக நீ அவனைச் சுட்டுக்கொன்றது சரியான தண்டனை."



ஹரேஷ் சொல்லிக் கொண்டிருக்கும்போதே- பூர்வாஸ், பிரார்த்தனாவின் மேல் பாய்ந்து- அவள் கையிலிருந்த துப்பாக்கியைப் பறிக்க முயல-

ஹரேஷ் தன் துப்பாக்கியை இயக்கினான்.

'டக...டக...டக...டக...டக...' தோட்டாக்கள் இசை பாட-

பூர்வாஸ் விதவிதமாய் துள்ளி-

வெறித்த கண்களோடு மல்லாந்தான்.

"குட் பை... என் பிரிய எதிரிகளே!" -சொன்ன ஹரேஷ், பிரார்த்தனாவோடு ராணுவ ஜீப்பை நோக்கிப் போனான்.

ஜீப்பில் வயர்லெஸ் இரைந்துகொண்டிருந்தது. அதை செவிமடுத்து உரையாடினான் ஹரேஷ்.

இந்திய கமாண்டர் ஒரே மாதிரியான குரலில் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருந்தார்.

"புரட்சிப்படை வீழ்ந்துவிட்டது. தளபதி ஹெரண்டார்ஸன் கைது செய்யப்பட்டுவிட்டார். மற்ற அதிகாரிகள் உடனடியாக சரணடைய வேண்டும். சரணடைய ஒரு மணி நேர அவகாசம் தருகிறோம். அந்த அவகாசத்திற்குள் சரணடையாவிட்டால்- நாங்களே கண்டுபிடித்து சுட்டுக் கொல்வோம்..."

"கமாண்டர்... கமாண்டர்... ஹியர் மீ...?"

"யார்...?"

"ஹரேஷ்... இந்திய விமானி..."

அவர்கள் சந்தோஷக் கூச்சல் போட்டார்கள்.

"ஹரேஷ்... ஸ்குவாட்ரன் லீடர்...?"

"ஆமாம்..."

"உங்களைத் தேடுவதில்தான் நாங்கள் முனைப்பாய் இருந்தோம்...! எங்கிருந்து பேசுகிறீர்கள்...?"

"ராணுவ பாரக்ஸ்... இந்தியத் தூதரின் மகள் பிரார்த்தனாவும் என்னோடுதான் இருக்கிறார்..."

"மகிழ்ச்சியான செய்தி. அங்கே உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லையே...?"

"இல்லை... இன்னும் சில நிமிடங்களில் நம் தூதரகத்தில இருப்போம்..."

வயர்லெஸ்ஸை அணைத்து– பிரார்த்தனாவை அருகில் உட்கார வைத்து– ஜீப்பைக் கிளப்பினான் ஹரேஷ்.

அவனுடைய நினைவில்– செல்வி சந்தோஷமாய் இடறினாள். இதயத்தின் மையத்தில் நின்றுகொண்டு– கண்ணீர் ததும்ப சிரித்தாள்.

"செல்வி..."

"ம்..."

"என் உடம்பின் காயங்கள் ஆறியதும்– பார்வதி கோவிலில் நம் கல்யாணம்..."

"அப்புறம்...?"

"நீ ஆசைப்பட்டபடியே ஆக்ரா போய் தாஜ்மகால் பார்க்கிறோம்."

"அப்புறம்?"

"ஓட்டலில் ஏ.சி. டீலக்ஸ் அறையில் நம் இரண்டாவது சாந்தி முகூர்த்தம்..."

ஜீப்பை ஓட்டிக்கொண்டு தனக்குத்தானே சிரித்துக்கொள்ளும் ஹரேஷை ஆச்சரியமாய்ப் பார்த்தாள் பிரார்த்தனா.

ஆகாயத்தில்–

இன்னமும் இந்திய மிக் ரக விமானங்கள் இரைந்து கொண்டிருந்தன.

அது இன்ப இரைச்சல்.

**(முடிந்தது)**

---

ராணிசிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: ர. பாஸ்கரன், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.
ராணிமுத்து பிப்ரவரி 1, 2009.